

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:

**ஸ்ரீமதஹோபிலமடம் 40-வது பட்டத்தையலங்கரித்த**
**ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகன்**
**பூர்வாச்ரமத்தில் அருளிய**

# ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகையின்,

**தமிழ்க்கருத்தாக்கமான**


**சொக்கனூர் வித்வான் Dr. எல். வி. நரஸிம்ஹாச்சார்யர், M. A., Ph. D. இயற்றிய**

# ஸ்ரீ பாஷ்யார்த்த தீபிகை

**நான்காவது அத்தியாயம்**

**1989**





ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதஹோபிலமடம் 40-வது பட்டத்தையலங்கரித்த
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகன்
பூர்வாச்ரமத்தில் அருளிய

# ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகையின்,

தமிழ்க்கருத்தாக்கமான
சொக்கனூர் வித்வான் Dr. எஸ். வி. நரஸிம்ஹாச்சார்யர், M. A., Ph. D. இயற்றிய

# ஸ்ரீ பாஷ்யார்த்த தீபிகை

**நான்காவது அத்தியாயம்**

*1989*

**This Book was published with the financial assistance of Tirumalai Tirupathi Devasthanam's** TIRUPATHI AID TO AUTHORS SCHEME.

**ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம். போன் : 85-2287**

பலமான பாபாச்லேஷவிநாசமும், உத்க்ரணமும் கூறப்படுகின்றன. பின்னிரண்டு பாதங்களில் உத்க்ராந்தனை ஜீவனுக்கு அர்ச்சிராதி மார்க்க கமனமும், ப்ரஹ்மப்ராப்தியும் முறையே பேசப்படுகின்றன. என்பது த்விக சங்கதி.

முதல் பாதம் முதல் அதிகரணத்தில் வித்யைக்கு முன் சொல்லப் படாதவையான த்யான, உபாஸனை, பக்தி, தர்சன, சமானுகாரத்வம் என்னும் ரூபங்களை நிரூபிக்கிறார் - என்று அதிகரண ஸங்கதி.

ஆனாலும், இவ்வர்த்தத்தை ஸாதநாத்யாயத்தில் நிரூபிக்காமல் பலாத்யாயத்தில் காட்டுவது பொருந்தாது என்றால் - அஃதில்லை. உபாஸனத்துக்கும் முக்திக்கும் ஸாத்ய ஸாதனபாவம் தோன்றவும், பக்தி யென்பது நிரசயப்ரீதி ரூபையாகையால் பல கோடியிலும் அடங்குமென்று காட்டவும், இங்கு நிரூபிப்பதில் தோஷமொன்றுமில்லையென்பதாம்.

## 471 (ஸூ) ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்

ப்ரஹ்ம விதாப்னோதிபரம், தமேவம் வித்வான் அம்ருத இஹ பவதி முதலியவாக்யங்களில் மோக்ஷஸாதனமாக விதிக்கப்பட்ட வேதனம் (ஜ்ஞானம்) ஒருமுறை அனுஷ்டித்தால் போதியதா அல்லது பலமுறையும் திரும்பத்திரும்பச் செய்யப்பட்டாலே பயன் தருவதா என்று சம்சயம். ஸயோஹவை தத்பரம் ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி என்று ப்ரஹ்மவேதனத்துக்கு பரப்ரஹ்ம ப்ராப்திஹேதுத்வம் கூறப்பட்டுள்ளபடியால் ஜ்யோதிஷ்டோமாதிகளைப்போலே ஒருமுறையே செய்தாலும் சாஸ்த்ரப்படி பலன்கிட்டுமாதலின். பலமுறை செய்யாமல் ஒருமுறையனுஷ்டானமே மோக்ஷசாதனம் என்று பூர்வபக்ஷம். இதனை நிரஸனம் செய்கிறார்.

## 472 (ஸூ) ஆவ்ருத்தி: அஸக்ருத் உபதேசாத்:

வேதநம் அடிக்கடி ஆவ்ருத்தி செய்யப்பட்டே மோக்ஷத்திற்கு ஸாதனமாகும். **உபதேசாத்:** த்யானத்திற்கும், உபாஸனத்திற்கும் பர்யாய-மான (சமமான) வேதநசப்தத்தால் உபதேசிப்பதால் என்றவாறு. ஸம்வர்க-வித்யையில் யஸ்தத்வேத யஸ்ஸவேத ஸமயைததுக்த: என்று தொடங்கி அனுமஏதாம் பகவோ தேவதாம் உபாஸ்ஸே என்று உபாஸனசப்தத்தைக் கொண்டு முடிப்பதால். இரண்டும் ஒரே - பொருளுள்ளவையென்று முடிவா-வதாலும். ப்ரஹ்மவிதாப்னோதி பரம் - நிதித்யாஸிதவ்ய; என்று வேதனத்-யானங்களுக்கு ஒற்றுமை காணப்படுவதாலும் த்யான-உபாஸனசப்தவாச்ய-மாய் பலமுறை ஆவ்ருத்தி செய்யப்படும் ஸ்ம்ருதி ஸந்ததிரூபமான வேதநம்தான் சாஸ்த்ரவிஹிதம் என்று கருத்து.

## 473 (ஸூ) லிங்காச்ச

லிங்கமாவது ஸ்ம்ருதி - ''மாம் த்யாயந்த உபாஸதே; தேஷாமஹம்ஸமுத்தர்த்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் / யேத்வக்ஷர மநிர்த்தேச்யம் அவ்யக்தம் பர்யுபாஸதே - தத்ருபப்ரத்யயே சைகா ஸந்ததிச் சான்யநிஸ்ப்ருஹா! தத்த்யானம் ப்ரதமைஷ்ஷட்பி: அங்கைர்நிஷ்பாத்யதேऽதுஹ' இது முதலிய கீதா, விஷ்ணு புராண வசனங்களாலும் பலமுறையும் ஆவ்ருத்தி செய்யப்பட்ட பக்திரூப வேதனமே முக்தி சாதனமென்று தேறிற்று.

## 152 ஆத்மத்வோபாஸநாதிகரணம்

## 474 (ஸூ) ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்திச

உபாஸனவிஷயனுன பரமபுருஷனை தன் அந்தர்யாமியென்று உபாஸிக்கவேண்டுமென்று சமர்த்திக்கிருர். என்று ஸங்கதி. உபாஸ்யமான ப்ரஹ்மம் உபாஸகனுல் தன்னில் வேறுபட்டதாக உபாஸிக்கத்தக்கதா. அன்றி தன் ஆத்மாவாக உபாஸிக்கத்தக்கதா என்று சம்சயம். '' அதிகந்து பேதநிர்தேசாத், அதிகோபதேசாத்து பாதராயணஸ்யைவம், தத்தர்சனுத் என்ற சூத்திரங்களில் உபாஸகனுன ஜீவனைக் காட்டிலும் உபாஸ்யனுன ப்ரஹ்மம் வேறு என்று காட்டியுள்ளபடியால், வேறென்றே உபாஸ்யம் என்று பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிருர்.

## 475 (ஸூ) ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்திச:

து சப்தம் உறுதிப்பொருளில் வந்தது. **ஆத்மேதிது** = ஆத்மா என்றே: உபாஸகன் உபாஸ்யத்தைத் தன் ஆத்மா என்றே உபாஸிக்கத்தகும். வேறென்ருயல்ல. ஏனெனில், ***உபகச்சந்தி*** = த்வா அஹமஸ்மி பகவோதே பதே அஹம்வைத்மஸி முதலிய ச்ருதிகள் கூறியபடி பழம் உபாஸகர்கள் உபாஸ்ய வஸ்துவைத் தங்கள் ஆத்மாவாகவே உபாஸித்தார்கள் என்று கருத்து ***க்ராஹயந்திச*** = ய ஆத்ம நிதிஷ்டன் ஆத்மனோऽந்தர: யமாத்மா நவேத யஸ்யாத்மா சரீரம் - ய ஆத்மான மந்தரோ யமயதி - ஸத ஆத்மாந்தர்யாமி யம்ருத: முதலிய வாக்யங்களும், உபாஸ்யமும் உபாஸகனும் வேருனவை என்று காட்டினுலும் ப்ரஹ்மத்தை உபாஸகனுக்கு அந்தர்யாமியென்று போதிக்கின்றன. மேலும் அதிகந்து பேதநிர்த்தேசாத்'' என்பது போன்றவையும் ப்ரஹ்மம் அந்தர்யாமியில்லையென்று தெரிவிக்கவில்லை ஸ்வரூபத்தால் வேறுபாட்டையே கூறுகின்றன. இப்படி உபாஸகன் பரமாத்மாவின் சரீரம் என்றும், பரமாத்மா ஜீவனுக்கு ஆத்மபூதம் என்றும் ச்ருதி சொல்வதாலும் அப்படியே, ஸர்வம்கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலானிதி சாந்த

உபாஸீத, ஸந் மூலாஸ்ஸோம்யேமா : ஸர்வா : ப்ரஜா : ஸதாயதநா: ஸத் ப்ரதிஷ்டா :. ஐததாத்ம்யமிதம் ஸர்வம் என்கிறபடியே ஜீவன் ப்ரஹ்மத்திற்கு அதீனமான ஸ்வரூப ஸ்திதிகளையுடையவன் என்று சொல்வதாலும், ப்ரஹ்மத்தை ஸ்வாத்மசரீரகமாக அநுஸந்திக்கும்போது, தனக்கும் ஆத்மாவாகையாலே அஹம்ப்ரஹ்மாஸ்மி என்று அனுஸந்திக்கவேண்டும். மனுஷ்யன், நான் என்னுமிடத்தில், தன் சரீரம் ஆத்மாவிற்குப்ரகாரமாகவேயிருப்பதால் அந்த சரீரவாசமான மனுஷ்யசப்தம் சரீரியான பரமாத்மாவைக் குறிப்பதாய் முடிவதுபோல் ஸ்வாத்மாவும் பரமாத்ம சரீரமாகையாலே தத்ப்ரகாரத்வம் சித்தமாதலின், அஹம் புத்தி சப்தங்களும் பரமாத்மாவிலேயே முடிவுபெறுகின்றன. இதனால் அஹம் ப்ரஹ்ம என்றுதானே உபாஸிக்க வேண்டுமென்று கூறப்பட்டதாகிறது.

## நான்காம் அத்தியாயம் முதல்பாதம் நான்காம் அதிகரணம்

## 153 ப்ரதீகாதிகரணம்

### 476 (ஸூ) நப்ரதீகேநஹிஸ

இப்படி ப்ரஹ்மோபாஸனத்தில் ஸ்வாத்மாவென்று உபாஸனம் இந்த்ரப்ராணாதிகரனத்தில் சொல்லப்பட்டது. ஆனாலும், அஹம்புத்தி சப்தங்களுக்கு பரமாத்மா என்ற பொருளிலேயே முடிவு என்ற அர்த்தத்தை உறுதிப்படுத்த இங்கு சொல்லப்பட்டது. இவ்வாறு மனோ ப்ரஹ்மேத்யுபாஸீத முதலியப்ரதீகோபாஸனங்களில் ப்ரஹ்மோபாஸனம் சமமாகையாலே ஸ்வாத்மா என்ற புத்தியில் உபாஸனம் செய்யத்தக்கது என்ற சங்கையால் சங்கதி, "மனோ ப்ரஹ்மேதி" முதலிய ப்ரதீகோபாஸனங்களிலும் மனோऽஹமஸ்மி என்று மனம் முதலியவற்றிலும் ஸ்வாத்மா என்று அனுஸந்தானம் செய்யத்தக்கதா இல்லையா என்று சம்சயம். மனோப்ரஹ்மேத்யுபாஸீத என்று மனம் முதலியவற்றில் உபாஸனத்திற்கு ப்ரஹ்மோபாஸனம் சமமாகையால், ஆத்மதயா அனுஸந்தானம் செய்யத்தக்கது, என்பது பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிறார்.

### 477 (ஸூ) நப்ரதீகேநஹிஸ:

*நப்ரதீகே* ப்ரதீகமான மனம் முதலியவற்றில் - மனோऽஹமஸ்மியென்று ஆத்மதயா உபாஸனம் ஆகிறது. ஏனெனில் *நஹிஸ:* அந்தப்ரதீகமான மனம் முதலியவை உபாஸகனுக்கு ஆத்மாவல்ல. ப்ரதீகோபாஸனத்தில் ப்ரதீகம்தான் உபாஸ்யமேயன்றி ப்ரஹ்மமல்ல; ப்ரஹ்மத்துக்கோ வெனில்த்ருஷ்டி விசேஷணத்வமேயுள்ளது. இங்கு ப்ரதீகமாவது அங்கம். சிதசிச்சரீரக ப்ரஹ்மத்தில் அசித்தும் ஏகதேசமாகையால் விசிஷ்டப்ரஹ்மத்தில் ஏகதேசமான அங்கமென்று

கருத்து. ப்ரதீகோபாஸனம் ப்ரஹ்மம் அல்லாதவற்றில் (ப்ரஹ்மமென்று திருஷ்டியில் விதிப்பதால்) ப்ரஹ்மமென்று அனுஸந்தானம் என்று கருத்து.

இங்கு மனம் முதலியவை அல்ப சக்தியுள்ளவையாதலால் அவற்றை ப்ரஹ்மம் என்ற திருஷ்டியுடன் உபாஸனம் செய்யச் சொல்வது சரியில்லை. ஆகையால் ப்ரஹ்மமே மனம் முதலிய த்ருஷ்டியால் உபாஸிக்கத்தக்கது என்ற பக்ஷத்திற்கு விடையருளுகிறார்.

## 478 (ஸூ) ப்ரஹ்ம த்ருஷ்டிருத்கர்ஷாத்

ப்ரஹ்மத்ருஷ்டி : மனம் முதலியவற்றில் ப்ரஹ்மத்ருஷ்டி செய்வதேதகும் ப்ரஹ்மத்தில் மனம் முதலிய த்ருஷ்டி செய்வது தகாது. ஏனெனில், *உத்கர்ஷாத்* — மன ஆதிகளைவிட ப்ரஹ்மமே சிறந்ததாதலால், கீழானவனை மேலானவனாகப் போற்றுவது உபசாரம். சேவகனை ராஜாவாகக் கூறுவதில் ஓர் மதிப்புத் தோன்றும். அரசனை சேவகனாகக் கூறுவது அபசாரம் - வருத்தத்தைத் தருவ-தாகும். ஆதலின், தீமையை விளைவிக்கும். இவ்விஷயம் பூமவித்யையிலும் உள்ளது.

## 154 ஆதித்யாதிமத்யதிகரணம்

## 479 (ஸூ) ஆதித்யாதிமதயச்சாங்கஉபபத்தே:

முன் அதிகாரணத்தில் கீழான பொருளில் மேலானவனே த்ருஷ்டி செய்யத்தக்கதெனப்பட்டது. அப்படியாகில், பலசாதனத்வேன உத்க்ருஷ்டமான உத்கீதாதியில் ஆதித்யாதி திருஷ்டி செய்யத்தக்கது. என்னும் சங்கையால் சங்கதி.

யஏவாஸௌ தபதி தமுத்கீதமுபாஸீத என்று சாந்தோக்யத்தில் சொல்கிறபடி கர்மாங்கமாக உத்கீதத்தில் உபாஸனம் செய்யும் விஷயத்தில் உத்கீதாதிகளில் ஆதித்யாதித்ருஷ்டி செய்வதா - ஆதித்யாதிகளில் உத்கீதாதி-த்ருஷ்டி செய்வதா என சம்சயம்? தாழ்ந்தவனிடமே உயர்ந்தோனை த்ருஷ்டி செய்யவேண்டுமென்ற ந்யாயத்தாலே பல சாதனமென்பதால் உயர்ந்த கர்மத்தைவிட கர்மசேஷபூதமான ஆதித்யாதி தேவதை த்ருஷ்டமானபடியால் ஆதித்யாதிகளிடம் உத்கீதாதி த்ருஷ்டி செய்வதே மேல் என்று பூர்வபக்ஷத்தை இங்கு நிரஸிக்கிறார்.

## 480 (ஸூ) ஆதித்யாதி மதயச்சாங்க உபபத்தே:

இதில் *ச* சப்தம் அவதாரணத்தை (உறுதியை)ச் சொல்கிறது. *அங்கே* க்ரதுவின் அங்கமான உத்கீதாதிகளில், *ஆதித்யாதிமதய ஏவ*=ஆதித்யாதி த்ருஷ்டியே செய்யத்தக்கது. ஏனெனில், *உபபத்தே:* கர்மங்கள் புலனையளிப்பதும்

ஆதித்யாதி தேவதாப்ரீதியை முன்னிட்டே வருகிறபடியால், அத்தேவதை-களுக்கே உயர்வு பொருந்துவதாதலின், முன் கூறிய ந்யாயத்தால், கர்மாங்க உத்கீதாதியில்தான் ஆதித்யாதிதிருஷ்டிகள் செய்யத்தக்கன.

***இங்கோர் விசேஷம்:*** இந்த சித்தாந்தத்தில் அன்யதாக்யாதியும் ஸத்க்யாதியும் பாஷ்யகாரர் திருவுள்ளம் பற்றியவை, அந்யதாக்யாதி பக்ஷத்-திலும், ஸத்க்யாதி பக்ஷத்திலும் த்ருஷ்டிவிதியான ப்ரகாரம் ஏதென்றால், சொல்வோம். சுக்தியில் இது வெள்ளி என்ற ஜ்ஞானம் – ரஜதத்வாபாவவத் விசேஷ்யகத்வ விசிஷ்ட ரஜதத்வ ப்ரகாரகத்வ ரூபமான அன்யதாக்யாதி லக்ஷணம் யுக்தம் ஆனாற்போல், இங்கும் கருடத்வாபாவவத் ஸ்வவிசேஷ்யக கருடத்வப்ரகாரகமாயும் கருடோऽஹம் இத்யாகாரகமாயுமுள்ள கருட த்ருஷ்டி-யிலும் ஆதித்யத்வாபாவவத் உத்கீத விசேஷ்யாதித்யத்வ ப்ரகாரமாயும் - உத்கீத ஆதித்ய இத்யாகாரகமாயுமுள்ள ஆதித்யத்யானத்திலும் அன்ய-தாக்யாதி லக்ஷணம் பொருந்துவதால். அன்யவஸ்துவில் அன்ய த்ருஷ்டி பொருந்துவதாம். ஸத்க்யாதிபக்ஷத்தில் எல்லா ஜ்ஞானங்களும் யதார்த்தமே யாதலால், வெள்ளியைப் பார்த்து இது வெள்ளி என்று தோன்றும்யதார்த்த ஜ்ஞானத்தில்போலவே, சுக்தியைக்கண்டு இது வெள்ளி என்று தோன்றும் அயதார்த்த ஜ்ஞானத்திற்கும் தத்தத்விசேஷ்யகத்வ விசிஷ்ட தத்ப்ரகாரகத்வ ரூப யதார்த்தத்வம் சொல்லத்தக்கது. அதெப்படியென்றால்,

பஞ்சீகரண ப்ரக்ரியையால் ஸாவயவத்ரவ்யத்தில் அதற்கொப்பான வேறு பொருளின் அவயவ ஏகதேசம் உள்ளதென்று ச்ருதியில் குறிப்பிடப் பட்டுள்ளமையால், சுத்தியிலும், ரஜதாம்சம் இருப்பதால் சுத்தியில் இது வெள்ளி என்ற ஜ்ஞானமும், ரஜதத்வம்போல், ரஜதவிசேஷ்யமாயும், ரஜதத்வ ப்ரகாரகமாயுமிருப்பதாலும், யதார்த்தத்வம் பொருந்துவதே. நான்கருடன்: உத்கீதமேஸூர்யன்: மனமே ப்ரஹ்மம். என்று த்ருஷ்டி விதி ப்ரகரணங் களிலோவென்றால் - த்ருஷ்டி விசேஷண பூதங்களான கருடன், ஆதித்யன், ப்ரஹ்மம் இவற்றிற்கு ஸாவயவத்வம் என்ற பிரஸத்தியில்லாமையால் த்ருஷ்டியில் விசேஷ்யமான புருஷன் உத்கீதம், மனஸ் இவைகளில் கருடாதி களில் அவயவம் உண்டென்று கூறுவது அசக்யம். ஆகையால், அந்தந்த த்ருஷ்டி களுக்கு கருடத்வவத் விசேஷ்யகத்வாதிகளில்லாமையால் யதார்த்தத்வமில்லை. எப்படியேனும் யதார்த்தத்வம் சொன்னால் உத்கீதாதிகளில் ஆதித்யாதி த்ருஷ்டிவிதி எப்படிக்கூடும் என்றால் கூறுவோம்: எங்கு அவயவம் உள்ளதோ அங்குதான் த்ரவ்யாந்தரத்தில் அவயவமிருப்பதைக் கொண்டு யதார்த்தம் என்று நிர்வஹிக்கலாம். த்ரவ்யாந்தரங்களில் அவயவத்திற்கு நிபந்தனமில்லாத தேஹாத்மாபிமானாதிகளில், பேதத்தைக்கிரஹிக்காத தன்மையுடன் கூடிய இரண்டு ஜ்ஞானங்களாயிருப்பதால் ப்ரபாகரர் மதத்தைப்போல் நிர்வாஹம்

செய்யவேண்டுமென்பது ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவுள்ளம். ஆகவே, நான் கருடன் என்னும் த்யானம். அஹம் த்வப்ரகாரக கருட விசேஷ்யகமாகிறது. கருட த்வப்ரகாரக கருட விசேஷ்யகமாயுமொரு ஜ்ஞானம் ஆக இருவகை ஜ்ஞானம், அப்படியே உத்கீதத்வ ப்ரகாரகமாயும் - உத்கீத விசேஷ்யகமாயும், ஆதித்யத்வப்ரகாரக ஆதித்ய விசேஷ்யகமாயும் உள்ள இரண்டு ஜ்ஞானங்கள் ஆகவே கருடனுக்கும், தனக்கும் உள்ள பேதத்தை க்ரஹிக்காத கருட விசேஷ்யகமாயும், ஸ்வாத்ம விசேஷ்யகமாயும் இரண்டு ஜ்ஞானங்கள் உத்கீத ஆதித்யபேதக்ரஹமற்ற உத்கீத விசேஷ்யக - ஆதித்யவிசேஷ்யக ஜ்ஞானத்-வயமே த்ருஷ்டிவிதி விஹிதம் என்று கருத்து. ஆதித்யாதி த்ருஷ்டிகளுக்கு ப்ராந்தித்வம் ஆவச்யகம் ஆகையால் பேதாக்ரஹத்தோடு கூடிய இரண்டு ஜ்ஞானங்களுக்கு ப்ராந்தித்வம் எப்படியென்றால், ப்ராபாகர மதத்தில்-சுக்தியைப் பார்த்து இது வெள்ளியென்றும் ஜ்ஞானத்தின் க்ரஹணமாயும், ஸ்மரணமாயும் இரு ஜ்ஞானங்களையொப்புக்கொண்டு அவற்றுள் பேதத்தை-க்ரஹிக்காமை. சுக்தி - ரஜதங்களில் அஸம்பந்தத்தை - க்ரஹிக்காமை, சுக்தி-ரஜதங்களில் பேதத்தைக்ரஹிக்காமை இவையே ப்ராந்தியென்று வ்யவஹரிக்கப் படுகிறது. *பேதாக்ரஹம் என்னும் அக்யாதி* கலந்த யதார்த்தக்யாதியே ஸித்தாந்தியுகந்தது என்பதாம். இவ்வாறு எல்லா ஜ்ஞானமும் ப்ரமாத்மகம் (ஸத்யம்) என்றால், உலகில் உள்ளப்ரமை, ப்ரமம் என்ற பேச்சு எப்படிப் பொருந்தும் என்றால் யதாவஸ்திதவ்யவஹாரானுகுணமான ஜ்ஞானத்வம் ப்ரமையில் லக்ஷணம். அயதாவஸ்தித வ்யவஹாரஹேது பூத ஜ்ஞானத்வம் எனப்படும் ப்ரமத்தின் லக்ஷணமும் பொருந்தும். ப்ரக்ருதத்தில் நான் கருடன், உத்கீதமே ஆதித்யன், மனமே ப்ரஹ்மம் இத்யாதி த்ருஷ்டிகளும், அயதா-வஸ்தித வ்யவஹாரானுகுணகள் ஆகையால், இவற்றில் ப்ராந்தியின் லக்ஷணம் நன்கு பொருந்தும் இதில் ஜ்ஞானமும் வ்யவகாரமும் அயதாவஸ்திதம் என்று பிறர்தம் கருத்து. வ்யவஹாரம் மட்டும் அயதாவஸ்திதமென்பது நம் ஆசார்யர்களின் திருவுள்ளம்.

## 155 ஆஸீனாதிகரணம்

## 481 (ஸூ) ஆஸீனஸ் ஸம்பவத்

இப்படி ப்ரதீகாதிகரணமும் ஆதித்யாதிமத்யதிகரணமும் ப்ரஸங்கத்தாலே வந்தன. இவ்வதிகரணத்தில் முதலில் கூறிய பகவதுபாஸனத்துக்கு அபேக்ஷிதமான ஆஸனாதிகள் சிந்திக்கப்படுகின்றன.

இந்தப்ரஹ்மோபாஸனத்தை உபாஸகன் ஆஸனத்திலிருந்துகொண்டே செய்யவேண்டுமா அன்றி இருந்தோ நின்றோ படுத்தோ, நடந்துகொண்டோ செய்யலாமா ? என்று சம்சயம். விசேஷமாக ஏதும் கூறப்படாமையாலே நியம-மேதுமில்லையென்று பூர்வபக்ஷம். அதனை நிரஸனம் செய்கிறார்,

## 482 (ஸூ) ஆஸீந: சம்பவாத்

*ஆஸீந:* உட்கார்ந்துகொண்டே உபாஸிக்கவேண்டும் *சம்பவாத்* உட்கார்ந்தவனுக்கே மனத்தில் ஓர்மையேற்படுவதால் என்றவாறு, ஓர்மையில்லாவிட்டால் உபாஸனம் சம்பவிக்காது என்பது கருத்து. ஆகவே, உட்கார்ந்தே உபாஸனம் செய்யவேண்டும்.

## 483 (ஸூ) த்யாநாச்ச

நிதித்யாஸிதவ்ய: என்று உபாஸனத்தை த்யான ரூபமாகச் சொல்வதாலே மனத்தில் ஓர்மை அவசியம். ஆதலின் உட்கார்ந்தே உபாஸிக்க - வேறொன்றும் இடையில் கலசாததாயிது இருக்கவேண்டும்.

## 484 (ஸூ) அசலத்வஞ்சாபேக்ஷ்ய

நிச்சலமான நிலையை உலகில் த்யானம் என்பதாலும் இதுவே பொருந்துவது. பூமி த்யானிக்கிறது. ஆகாசம் த்யானிக்கிறது என்று பூமவித்யையிலே உள்ளது. ஆகவே த்யான நிஷ்டனுக்கு ப்ருதிவ்யாதிகளைப் போலே அசலத்வம் ஸ்திதி மூலமாகவே சம்பவிக்குமென்று கருத்து.

## 485 (ஸூ) ஸ்மரந்திச

"உபவிச்யாஸனே யுஞ்ஜ்யாத் யோகமாத்மவிசுத்தயே" என்று ஆஸீனனுக்கே த்யானத்தை ஸ்மரிக்கிறார்கள். [ஆஸீனன்=உட்கார்ந்தவன்]

## 486 (ஸூ) யத்ரைகாக்ரதா தத்ராவிசேஷாத்

*யத்ர*=எந்த தேச காலங்களில் மனத்திற்கு *ஏகாக்ரதா*-ஓர்மித்ததன்மை ஏற்படுகிறதோ - *தத்ர* அதே தேசத்தில் - காலத்தில் உபாஸனம் செய்ய வேண்டும். ***அவிசேஷாத்*** மணல் முதலியவையில்லாததும் மனத்திற்கு அனுகூலமானதும் சுத்தமாயுமுள்ள தேசத்தில் என்ற வாஜஸநேயத்தில் மனத்தின் ஓர்மை தவிர மற்ற தேசம் காலம் பற்றிய பேச்சேயில்லையாதலால் என்றபடி, மன ஓர்மைக்கு அனுகூலமான காலமும் தேசமும் உபாஸனானுகூலங்களென்று கருத்து. இதனால் ஆஸனம், ஸ்திதி - கமனாதிகளுக்குள் ஆஸனத்தையே விசேஷித்தெடுத்திருப்பதால் ஆஸீனனாகவே (உட்கார்ந்தே) உபாஸனம் செய்யவேண்டுமென்று தேறிற்று. இங்கு கவனிக்கவேண்டியது—

வித்யாங்கபாதத்தில் வித்யையின் அங்கங்களெல்லாம் சொல்லப்பட்டு விட்டபடியால் திரும்பவும் ஆஸனுதிகளான அங்கங்கள் பற்றி ஏன் இங்கு சிந்தை? என்ருல், எண்ணெயின் தாரையைப்போல் இடைவிடாத ஸ்ம்ருதி ஸந்ததிரூபையான பக்தி (த்யானம்) தினமும் மேன்மேலும் மிகவும் கவனத்துடன் ஸாதிக்கத் தக்கது. ஆதலின், அது ஆஸனுத்யங்க மூலமான மனத்தின் ஓர்மையுடன் இதரங்களைப் பற்றிய அனைத்து முயற்சிகளுமிருக்காவிடில் உண்டாகக்கூடியதல்ல என்ற கருத்தால் மறுபடி ஆஸனுத்யங்கசிந்தை ஸூத்ரகாரரால் செய்யப்பட்டதாம்.

## 156 ஆப்ரயாணுதிகரணம்

### 487 (ஸூ) ஆப்ரயாணுத் தத்ராபிஹி த்ருஷ்டம்

இந்த மோக்ஷ ஸாதனமான உபாஸனம் ஒரே நாளில் செய்யவேண்டியதா? கடைசி மூச்சுவரை தினமும் செய்யவேண்டியதா என்று சம்சயம். ஒருநாள் செய்தாலே சாஸ்த்ரபலன் சித்தித்து விடுவதால் அதனுலேயே முடித்துவிடத்தக்கது. ஆயுள் உள்ளவரை செய்ய வேண்டுமென்ற ச்ருதியோவென்ருல். இதில் விதியைக்குறிக்கும் சொல் இல்லாமையால் பலத்தைக் குறிப்பதாகக் கொள்ளத்தகும் என்பது பூர்வபக்ஷம் இத்தை நிரஸிக்கிருர்.

### 488 (ஸூ) ஆப்ரயாணுத் தத்ராபிஹித்ருஷ்டம்

மரணம்வரை உபாஸனம் செய்யத்தக்கது. **தத்ராபிஹி த்ருஷ்டம்** உபாஸன ஆரம்பம் முதல் மரணம்வரை முழுவதும் உபாஸனம் காணப்படுகிறது 'ஸகல்வேவம் வர்த்தயன்யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே' யென்னும் ச்ருதியில் விதிப்ரத்யயமில்லாவிட்டாலும் உபாஸனுவ்ருத்தியானது வேறு ப்ரமாணத்தால் கிடைக்காததாதலின் உபாஸனுவ்ருத்தி விதியை ஏற்க வேண்டுமென்று கருத்து.

## 157

### 489 (ஸூ) தததிகம — உத்தர பூர்வாக யோரச்லேஷவிநாசௌ தத்வ்யபதேசாத்

இப்படி ப்ரஹ்ம வித்யாஸ்வரூபத்தை நிரூபித்து தத்பலங்களான பாபசம்பந்தமின்மை - பாபத்தின்நாசம் இவற்றை மேல் நான்கு அதிகரணங்களாலே நிரூபிக்கிருர் என்று பேடிகாஸங்கதி.

ப்ரஹ்மவித்யை ஸ்வத: ஆனந்தரூபையாகையால், பலமாகவே சேர்க்கத்தக்கது - ஆதலின், அதன் ஸ்வரூபத்தை ஆராய்வதும், இந்தபலாத்

யாயத்தில் பொருந்துவதேயாம். ப்ரஹ்மவித்தின் வித்யாரம்பத்திற்குப் பின்னுல் வரும் பாபங்கள் சம்பந்திக்காமையும், முன்புள்ள பாபங்களுக்கு விநாசமும் ஏற்படுமா ஏற்படாதா என்று சம்சயம். "நாபுக்தம்க்ஷீயதே கர்ம" என்று சொல்கையால் அச்லேஷ விநாசச்ருதி - ஸ்துதிக்காக ஏற்பட்ட-தென்பதால் - உண்மையில் அச்லேஷமும் விநாசமும் ஸம்பவிக்கமாட்டா என்று பூர்வபக்ஷம் இதனை நிரஸிக்கிருர்.

## 490 (ஸூ) ததிகமே தத்வ்யபதேசாத்

***ததிகமே***=ப்ரஹ்மவித்யையை அனுஷ்டித்தபோது; ***உத்தரபூர்வாகயோ:***= வித்யானுஷ்டானத்தின் முந்தைய - பிந்தைய பாபங்களுக்கு அச்லேஷமும் விநாசமும் வரும். ***தத்வ்யபதேசாத்*** அவ்வாறுச்ருதி சொல்லுவதால், ஏவம், வித் பாபம் கர்மநச்லிஷ்யதே - ஏவம்ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே என்பது முதலியவை அவ்வாறு கூறுவன, இப்படியாகில், நாபுக்தம் க்ஷீய தேகர்ம என்பதற்கு என்ன கதி என்ருல், செய்த கர்மாக்களுக்கு ப்ரஹ்ம-வித்யாதிகளால் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளாவிடில், கர்மபலம் அனுபவித்தே தீரவேண்டுமென்று அதுபலன்தருவதை உறுதிப்படுத்துவதால், விரோதமில்லை. இப்படியாஞல் ப்ரஹ்மவித்யை ஸர்வ பாபப்ராயச்சித்த ரூபையாதலின், ஸ்வர்க்கார்த்தம் சாதனமாக யாகத்தை யனுஷ்டிப்பதுபோல முக்திக்காக வேறு சாதனத்தை யனுஷ்டிக்க வேண்டாமோ என்ருல் - கூறுவோம். ஸ்வர்கானுபவம் கர்மாவை உபாதியாகக்கொண்டது. ஆதலால், கர்மாவை-யனுஷ்டிக்க வேண்டும், முக்தியோ ஜ்ஞான ஸங்கோச நிவ்ருத்தியை முதலில் கொண்ட ப்ரஹ்மானுபவத்திற்குத் தடையான எல்லாப் பாபங்களுக்கும் ப்ராயச்சித்தமான வித்யானுஷ்டானத்தால் சமனமானவுடன் - ஸங்கோச காரணமில்லாததாலும், ஜ்ஞானஸங்கோச நிவ்ருத்தியே முக்தியாதலாலும் ஸ்வபாவத்தால் சித்தித்த விசிஷ்ட ப்ரஹ்மானுபவசக்தி தோன்றுகையால், ஸ்வர்க்காதிகளிலிருந்து வேறுபாடு ஸித்தமாகையால், வேறு ஸாதனம்தேவையில்லையென்று கருத்து.

## இதில் உள்ளதோர் விசேஷம்

இங்கு அச்லேஷமென்பது கர்மசக்தியுண்டாகாமை. பாப விநாசம் என்பது உண்டான கர்மசக்திகளின் அழிவு. கர்மசக்தியென்பது புருஷன் செய்த புண்ய பாபங்களுக்கும் ஏற்றபடி பலனைக்கொடுக்கும் பகவானின் நிக்ரஹமும் அனுக்ரஹமுமே. இவ்வாருஞல் நிமித்தமிருப்பின் நைமித்திகம் உண்டென்னும் நியாயத்தால் முன் பாபங்கள் தோன்றியவையாதலின், அவற்றிற்கு ப்ரஹ்மவித்யை ப்ராயச்சித்தமாகட்டும். பிந்தைய பாபம் உண்டா

காமையால், அதற்குப்ரஹ்மவித்யை எப்படி ப்ராயச்சித்தமாகும் என்றால், அபுத்தி பூர்வகமான பாபத்திற்கும் ப்ரஹ்மவித்யை நைமித்திகப்ராயச்சித்தம் என்பது ஸூத்ரகாரர் திருவுள்ளமன்று. ப்ரஹ்மவித்யா நிஷ்டனுக்கு அபுத்தி பூர்வபாபம் பாபமேயன்று என்பதே திருவுள்ளம். ஆகவே, ப்ரஹ்மநிஷ்டனுக்கு புத்தி பூர்வக உத்தராகம் ஸம்பவிக்காது. அப்படித்தோன்றினாலும், அந்த பாபத்தை ப்ராயச்சித்தத்தால் போக்கடிக்க வேண்டும். அது செய்யாவிடில், விரைவில் பாபபலனை அனுபவித்தே முக்திபெறுவான். இந்த விருத்தாந்தம் வ்ருத்ராதிகளிடம் கண்டோம். ஆகவே, புத்தி பூர்வாகத்திற்கு அவசியம் ப்ராயச்சித்தம் செய்யவேண்டும் என்றதாயிற்று. இப்படியாகில், தினமும் நூற்றுக்கணக்கில் பாபங்களைச் செய்த சிசுபாலனுக்கு உத்தராகப்ராயச்சித்தமில்லாமையால் எப்படி முக்தியென்று கேட்கலாம் யாதவாப்யுதயத்தில் அபராதியான சிசுபாலனுக்கு முற்பிறவியில் செய்த உபாஸன விசேஷத்தால் பரப்ரஹ்மமான ஸ்ரீக்ருஷ்ணனின் ஸேவை கிட்டியதே ப்ராயச்சித்தமாதலின், விரோதமில்லையென்று அருளிச்செய்யப்பட்டது. புத்தி பூர்வமான உத்தராகங்களுக்கு ப்ராயச்சித்தம் செய்யாவிடில் முக்தி, காலாந்தரத்தில் விளம்பித்தே கிடைக்கும்.

## 158 இதராதிகரணம்

முன்பு பாபத்துக்கு அச்லேஷமும் விநாசமும் கூறப்பட்டன. இங்கு ஸுக்ருதத்திற்கும்-அச்லேஷவிநாசங்கள் கூறப்படுகின்றன என்று அதிதேசத்-தால் ஸங்கதி.

## 491 (ஸூ) இதரஸ்யாப்யேவ மஸம்ச்லேஷ: பாதேது

புண்யகர்மாவிற்கு அச்லேஷ விநாசம் கூடுமா கூடாதாயென்று ஸம்சயம். புண்யபலம் ஸுகரூபமாகையால், ப்ரஹ்மவித்துக்கு அநிஷ்டமில்லாமையாலும், புண்யத்தின் அச்லேஷ விநாசங்கள் கூடா என்பது பூர்வபக்ஷம். அதனை நிரஸிக்கிறார்.

***இதரஸ்யாபி*** = பாபத்தின்வேறான புண்யத்திற்கும் ***ஏவம்*** = பாபத்துக்குப் போலவே அச்லேஷ விநாசங்கள் ஸமமானவை. புண்ய பலமான ஸ்வர்க்கமும் முமுக்ஷுவுக்கு அனிஷ்டம் ஆகையால், அநிஷ்டபலத்வமென்னும் பாபத்தின் லக்ஷணம் புண்யத்திலும் சமமாகையால், அகம் எனப்படும் புண்யங்களுக்கும் அச்லேஷமும் விநாசமும் யுக்தங்கள். வித்யைக்கு ஏற்ற மழை, உணவு, ஆரோக்யம் முதலியவற்றிற்கு ஹேதுவான புண்யத்துக்கோவெனில், ***பாதேது*** = சரீரம் விழுந்துவிட்டதும் அனிஷ்டமாகையால் அச்லேஷம் கூடுமென்பதாம். இங்கோர்வினா - வித்வானின் பூர்வ ஸுக்ருதத்துக்கும் விநாசம் கூடும் என்பது இருக்கட்டும். விரக்தனான வித்வான் காம்யங்களை

விரும்பாமையாலும், ஒரு வேளை கவனக்குறைவால், காம்யத்தைச்செய்-தானுகிலும், அது பலிக்கவே செய்யும் ஆகவே, உத்தர புண்யாச்லேஷத்திற்கு விஷயமில்லை. ஸர்வகாம்யங்களும் புத்திபூர்வங்களேயாதலின், அபுத்திபூர்வ க்ருதமான புண்யமும் அச்லேஷ விஷயமன்று. வித்யைக்காக அனுஷ்டித்ததான ஸுக்ருதமோ வென்ருல், பல பூதையான வித்யோத்பத்தியால் தீர்க்கப்பட்டு விடுவதால். உத்தர புண்யச்லேஷம் எப்படிச் சொல்லக்கூடும் என்ருல் கூறுவோம். வித்யோத்பத்திக்காகச் செய்த ஸுக்ருதங்களுக்குள் உபயுக்தமான (எஞ்சிய) சிஷ்டஸுக்ருதத்திற்கும் மோஹத்தால் வேறு பலத்திற்காகச் செய்த ஸுக்ருதத்திற்கும் ப்ரபலமான கர்மாக்களால் தடை வரும். ஆதலின், அப்போது பலனைக்கொடுக்காத அந்தக்கர்மமும் வித்வானின் விஷயத்தில் ஸ்னேஹத்தால் பிறர் செய்த ஸுக்ருதமும் வித்வானுக்கு அனிஷ்டங்-களாகையால், இவையே அச்லேஷ (அசம்பந்த) விஷயங்களாகக் கூடும் என்பதாம்.

## 159 அநாரப்தகார்யாதிகரணம்

### 492 (ஸூ) அநாரப்த கார்யே ஏவது பூர்வே ததவதே:

ப்ரஹ்மவித்யோத்பத்திக்கு முன்னும் பின்னுமுள்ள ஸுக்ருத துஷ்-க்ருதங்களுக்கு அச்லேஷமும் விநாசமும் கூறப்பட்டன. இப்போது வித்யைக்கு முன்புள்ள ப்ராரப்தேதரமான ஸுக்ருத துஷ்க்ருதங்களுக்கு மட்டும் வித்யா மாஹாத்ம்யத்தால் விநாசம் இங்கு ஸமர்த்திக்கப்படுகிறது.

வித்யோத்பத்திக்கு முன்புள்ள புண்யபாபங்கள் அனைத்திற்கும் விநாசமுண்டா அல்லது ப்ராரப்தத்தினைத் தவிர்த்த கர்மங்களுக்குமட்டுமா என்று சம்சயம். ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே என்று பொதுவாகக் கூறியிருப்பதால். எல்லாபாபங்களுக்கும் விநாசம் கூடுமென்பது பூர்வபக்ஷம். அதை நிரசிக்கிருர். (ஸூ) அநாரப்த ...... ததவதே:

'து' சப்தம்பக்ஷத்தை விலக்குவது. பூர்வே அநாரப்த கார்யே ஏவ வித்யோத்பத்திக்கு முந்தைய - ப்ராரப்தமல்லாத கர்மாக்களே நசிக்கின்றன. ஏனெனில், ததவதே: = ''தஸ்யதாவதேவசிரம் யாவத் ந விமோக்ஷ்யே அதஸம்பத்ஸ்யே'' என்று வித்யை பூர்த்தியானவனுக்கு உடலைவிடும்வரை, விளம்பமுண்டென்று வேதம் கூறுவதால் - ஸர்வகர்மங்களும் அழிந்திட்டால் சரீரஸ்திதியே ஸம்பவிக்காது. ஆதலின் - சரீரத்தைத் - தரிப்பதற்குக் காரண மான ப்ராரப்தகர்மம் தவிர மற்ற அப்ராப்த கர்மங்களுக்கே நாசம் என்று தேறிற்று.

## 160 அக்னிஹோத்ராத்யதிகரணம்

இதரஸ்யாப்யேவ மசம்ச்லேஷ: என்ற ஸூத்திரத்தில் வித்யாபலத்தால் ஸுக்ருதத்துக்கும் அச்லேஷம் கூறப்பட்டது. அக்னிஹோத்ரம் முதலிய, நித்யநைமித்திகமான தத்தம் ஆச்ரமதர்மங்களும், பொதுவாக ஸுக்ருதத்தில் அடங்குவதால், அவற்றின் பலங்களுக்கும் அச்லேஷம் வரத்தோன்றுவதால் பலத்தில் விருப்பம் இல்லாதவனுக்கு அனுஷ்டானம் ஸம்பவிக்காது என்கிற சங்கையால் ஸங்கதி.

அக்நிஹோத்ரம் முதலிய ஆச்ரமதர்மமானது வித்வானல் அனுஷ்டிக்கத் தக்கதா இல்லையா என்று சம்சயம். ஸுக்ருததுஷ்க்ருதங்களுக்கு அச்லேஷ விநாசம் சொல்வதால் அவ்வாச்ரம தர்மங்களும், ஸுக்ருதங்களாகையாலே தத்பலத்துக்கும் அச்லேஷம் வரத் தோன்றுவதால் பயனற்ற அக்னிஹோத்-ராதிகள் அனுஷ்டிக்க வேண்டாதவை என்று பூர்வபக்ஷம். இத்தை நிரஸிக்கிறார்.

### 493 (ஸூ) அக்னிஹோத்ராதிது தத்கார்யாயைவ தத்தர்சனாத்

துசப்தம் பூர்வபக்ஷத்தை விலக்குகிறது. அக்னிஹோத்ராதியான ஸுக்ருதமானது *தத் கார்யாயைவ* = வித்யோத்பத்தியென்னும் கார்யத்திற்காகவே அனுஷ்டிக்கத்தக்கது என்றவாறு. ஏனெனில், *தத்தர்சனாத்* = தமேதம் வேதானுவசனேன, என்று ச்ருதியில் அக்னிஹோத்ராதி தர்மங்களுக்கு வித்யா ஸாதனத்வம் காணப்படுவதால் என்றபடி. வித்யையோ நாள்தோறும் செய்யும் அக்னிஹோத்ராதி நித்ய நைமித்திககர்மத்தால், தேஹத்தை விடுமளவும் வளர வேண்டியிருப்பதால், அதற்காக ஆச்ரமதர்மத்தை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும். அப்படி அனுஷ்டிக்காவிடில் வித்யையே உண்டாக மாட்டாதென்பது கருத்து. அனுஷ்டித்தகர்மத்துக்கு பலமேற்பட ப்ரதிபந்தம் ஏற்படுமா? ஏற்படாதா என ஸந்தேஹித்து ஏற்படலாமென்று முன் கூறியதைக் காட்டுகிறார்.

### 494 (ஸூ) அதோ ऽன்யாபிஹ்யேகேஷாமுபயோ:

*அத:* = வித்யைக்குக் காரணமான அக்னிஹோத்ராதி தர்மத்தைக் காட்டிலும் வேறான, அன்யாபி இதுவரை பலன் தராத கர்மாக்களும் உள்ளனவேயென்று சில சாகிகளின் மதம் உண்டு.

### 495 (ஸூ) யதேவ வித்யயேதிஹி

ஹி எதனல், யதேவவித்யயா கரோதி ததேவ வீர்யவத்தரம் கரோதி என்று உத்கீத உபாஸனத்தாலே க்ரது பலமான ஸ்வர்காதிகளுக்குக்

கர்மாந்தரங்களால் ப்ரதிபந்தமேற்படாமை கூறப்பட்டதோ, அதேகாரணத் தால் பலம் ப்ரதிபந்தமடைந்த ஸாதுக்ருத்யங்கள் உண்டென்று வசனத் துக்கு முன் கூறியதே விஷயமென்று

## இங்குள்ள விசேஷம்

"ஸர்வாபேக்ஷா ச" என்ற அதிகரணத்தில் கர்மாக்கள் அங்கமெனப்பட்டன. இங்கும் கர்மாக்களுக்கு அங்கபாவத்தை ஏன் கூறுகிறுரென்ருல், முன்பாதத்தில் வித்யை-எதையும் எதிர்பாராததென்று சங்கித்து, எதிர்பார்ப்பதே (ஸாபேக்ஷம்) என்று சாதிக்கப்பட்டது. இவ்வதிகரணத்திலோ ஸுக்ருதம் ஒட்டாது என்ற ப்ரஸங்கத்தில், அக்னிஹோத்ராதிகளும் ஸுக்ருதமாகையால், அவற்றை விட்டுவிடலாமென்று சங்கதி, அவை அவச்யம் அனுஷ்டிக்க வேண்டியவை என்று ஸ்தாபிக்கப்போவதால் கூறியது கூறல் என்ற தோஷமில்லையாம்.

## 161 இதர க்ஷபணுதிகரணம்

### 496 (ஸூ) போகேனத்விதரேக்ஷபயித்வாSத ஸம்பத்யதே

பலன் கொடுக்கத் தொடங்காத புண்ய பாபங்களுக்கு வித்யையாலே விநாசம் சொல்லப்பட்டது. இப்போது ப்ராரப்த கார்யங்களுக்கு வித்யை தோன்றிய சரீரத்தின் முடிவிலேயோ ப்ராரப்தகார்ய சரீராந்தரத்தின் முடிவிலோ விநாசம் என்று அநியமத்தை ஸ்தாபிக்கிருர் என்று சங்கதி.

ஆரப்த கார்யங்களான புண்ய பாபங்கள் வித்யாயோனி சரீரமுடிவில் அழிகின்றனவா? அல்லது அந்த சரீராவஸானத்திலாவது அடுத்த சரீரத்தின் முடிவிலாவது அழிக்கின்றன வென்று அநியமமா? என்று சம்சயம். யாவந்ந விமோக்ஷ்யேऽத ஸம்பத்ஸ்யே என்று ப்ரஹ்மத்தையடைய சரீரமாத்ரத்தால் விளம்பம் ச்ருதமாகையால், வித்யோத்பத்தியான சரீரத்தின் முடிவிலேயே யழிகின்றன என்று பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிருர். (ஸூ) போகேனது ......ஸம்பத்யதே

து சப்தம் பூர்வபக்ஷத்தை விலக்குவது *இதரே* - ஆரப்த கார்யங்களான புண்ய பாபங்களைபோகேன *க்ஷபயித்வா* - பலானுபவத்தால் போக்கடித்து *அத*=பிறகு, ப்ராரப்த கர்மாவஸானத்தில், *ஸம்பத்யதே* ப்ரஹ்மவித்தானவன், பரப்ரஹ்மத்தையடைகிருன் என்பதால். யாவத்நவிமோக்ஷ்யே என்ற ச்ருதியும் ப்ராரப்த கர்மத்தின் முடிவிலேயே மோக்ஷம் என்பதைக் கூறுகிறது. உபாயம் நிறைவேறியவனுக்கு ப்ராரப்தத்தின் பலமான புண்ய பாபங்கள் எவ்வளவு சரீரங்களால் அனுபவிக்கத்தக்கனவோ அவ்வளவு சரீரங்களைப்பரிக்ரஹித்து

புண்யபாபங்களை அநுபவித்துத் தீர்த்துப் பின்னரே முக்தனாகிறானென்று கருத்து.

## இந்த பாதத்தில் அதிகரணங்களின் கருத்துச்சுருக்கம்

1 ஆவ்ருத்யதிகரணத்தில், ப்ரஹ்மவித்யோபாஸனம் அடிக்கடி செய்யவேண்டுமென்றும்,

2 ஆத்மத்வோபாஸநாதிகரணத்தில் அஹம் ப்ரஹ்மாஸ்மி என்று உபாஸிக்க வேண்டுமென்றும்,

3 ப்ரதீகாதிகரணத்தில்-ப்ரதீகங்களான மனம் முதலியவற்றில் அஹம்மன: என உபாஸிக்கக்கூடாதென்றும்,

4 ஆதித்யாதிமத்யதிகரணத்தில்-உத்கீதத்தில் ஆதித்யாதித்ருஷ்டி செய்ய வேண்டுமென்றும்,

5 ஆஸீநாதிகரணத்தில்-ஆஸனத்தில் வசதியாயமர்ந்தே உபாஸிக்க வேண்டுமென்றும்,

6 ஆப்ரயாணாதிகரணத்தில் - வித்யாயோனியான சரீரமுள்ளளவும் தினமும் இடைவிடாது சிந்திக்கவேண்டுமென்றும்,

7 தததிகமாதிகரணத்தில்-வித்யையின் மஹிமையால் பூர்வோத்தராகங்களுக்கு அச்லேஷவிநாசம் என்றும்,

8 இதராதிகரணத்தில் ஸ்வர்க்காதிசாதனமான புண்யத்திற்கும் அச்லேஷவிநாசங்கள் கூடுமென்றும்,

9 அநாரப்தகார்யாதிகரணத்தில், ப்ராரப்தகர்மாக்களுக்கு போகத்தாலேயே நாசமென்றும்,

10 அக்னிஹோத்ராத்யதிகரணத்தில் வர்ணாச்ரமதர்மங்களுக்கு அவச்யானுஷ்டேயத்வமும்,

11 இதரக்ஷபணாதிகரணத்தில் ப்ராரப்தகர்மத்தின் முடிவில் மோக்ஷமென்றும் பதினொரு பொருட்களை ஸ்வாமிதேசிகன் ஒரு ச்லோகத்தில் விளக்குகிறார்

நான்காம் அத்தியாயம் முதல் பாதம் முற்றிற்று.

# நான்காம் அத்தியாயம் இரண்டாம் பாதம்

## 162 வாகதிகரணம்

### 497 (ஸூ) வாங்மனஸி தர்சனாச் சப்தாச்ச

முன்பாதத்தில் ஸ்தூல தேஹத்திலேயிருக்கும்போது பாபங்களின் அச்லேஷமும் விநாசமும் வித்யாபலமாகக்காட்டி, இரண்டாம் பாதத்தில் அர்ச்சிராதிகதிக்கு உபக்ரமமாயும், அழியும் நிலையிலுள்ள ஸ்தூல தேஹத்திலிருந்து உத்க்ராந்தி (புறப்பாடு) யை முடிவாகவும் கொண்ட வித்யா-பலத்தைச் சிந்திக்கிறாரென்று பாதஸங்கதி.

கதிக்குத் தொடக்கமான உத்க்ராந்தி கூறப்படுவதால் அதிகரண-ஸங்கதி. ஆமாம்; வைராக்ய பாதத்தில் ஜீவனின் ஜாக்ரத்தசை முதலியன நிருபிக்கப்பட்டமையால், அத்துடனேயே இந்திரியாதிகளின் குழப்பநிலையான மரணம்பற்றியும் பேச வேண்டியிருக்க, இங்கு தனியேயது பற்றிச் சொல்வதன் கருத்து யாதெனில்,

ப்ரஹ்மவித்தின் உத்க்ராந்தியில் மூர்த்தன்யநாடி மூலமாக கமனம் சொல்வதற்காக வைராக்யபாதத்தில் பொதுவாக உத்க்ரமணத்தைக்கூறி இங்கு விசேஷத்தைக் கூறியபடியாம்,

அஸ்ய ஸோம்ய புருஷஸ்ய ப்ரயதோ வாங்மனஸி ஸம்பத்யதே - மன: ப்ராணே என்பது முதலிய உத்க்ராந்தி பற்றிய ச்ருதி, வாகிந்த்ரியத்திற்கு மனஸ்ஸில் லயத்தைச் சொல்கிறதா என்று சம்சயம். வாக்கானது மனத்தை மூலமாகக் கொள்ளாமையால் ப்ரக்ருதியைவிட்டு வேறொன்றில் எதற்கும் லயம் கூடாதாகையால், வாக்வ்ருத்திமாத்திரத்தின் லயத்தை இது சொல்-கிறதென்று பூர்வபக்ஷம். இதனை நிராகரிக்கிறார்.

### 498 (ஸூ) வாங்மனஸி தர்சனாச் சப்தாச்ச

வாக் மனஸி = வாகிந்த்ரியம் மனத்தில் சம்பந்திக்கிறது. தர்சனாத் வாகிந்த்ரியம் ஓய்வடைகையில், மனத்தில் செயல் காணப்படுவதால் என்றபடி வாக்வ்ருத்தியினைத்துக்கும் லயம் கூறினாலும், இது பொருந்துமென்றால். அங்ஙனமல்ல - சப்தாச்ச = வாங்மனஸி ஸம்பத்யதேயென்று வாகிந்திரியத்திற்கே மனதில் லயத்தைக்கூறும் சப்தத்தாலென்றபடி. வாக்வ்ருத்திக்கே லயம் என்ற பக்ஷத்திலோ அதற்கான சப்தம் இல்லாமையால், அகாரணத்தில் ஸம்பத்தி (லயம்) வராதென்ற தோஷம் சமமாகையால், அந்தபக்ஷம் கூடாது. ஸம்பத்தி என்பது ஸம்யோகத்தைக் குறிப்பதால், அகாரணத்தில் லயத்தைக் கூறவில்லை. ஆதலின், விரோதம் இல்லையென்று கருத்து.

## 499 (ஸூ) அதஏவ ஸர்வாண்யநு

எக்காரணத்தால் வாகிந்த்ரியத்திற்கு மனஸ்ஸில் ஸம்யோகம் மட்டும் ஸம்பத்தி என்ற சொல்லால் கூறப்பட்டதோ - லயம் என்பது கூறப்பட வில்லையோ - அதேகாரணத்தால் அது, ஸர்வேந்த்ரியங்களும் வாக்கை அநுசரித்து மனஸ்ஸில் ஸம்பந்திக்கின்றன என்னும் அர்த்தத்தைச் சொல்லும் - தஸ்மாதுபசாந்ததேஜா :- அபுனர்ப்பவமிந்த்ரியை: மனஸி ஸம்பத்யமானை: என்னும் ச்ருதிவசனம் பொருந்துகிறது என்று கருத்து.

## 163 மனோதிகரணம்

## 500 (ஸூ) தந்மன: ப்ராண உத்தராத்

வாங்மனஸிஸம்பத்யயே வாக்ப்ராணே என்ற ச்ருதி க்ரமத்தை யநுஸரித்து சித்திப்பதால், ஸங்கதி வெளிப்படையாயுள்ளது. "மன: ப்ராணே" என்னும் ச்ருதியில் - ப்ராண சப்தத்தால் அப்பு (நீர்) சொல்லப் படுகிறதா? ப்ராணன் தானாயென்று ஸம்சயம். ப்ராணன் மனதிலிருந்து நேரில் இல்லாத போதிலும், "அன்னமயம் ஹிஸோம்ய மன:" என்று மனத்திற்கு அன்னவிகாரத்வம் ச்ருதமாகையால் அன்னம் என்பதன் பொருளான ப்ருதிவிக்கு ஜலம் காரணமாகையால் ஆபோமய: ப்ராண: என்னும் ச்ருதியால் ப்ராணனுக்கு ஜலமயத்வம் தோன்றுவதாலும், பரம்பரை யாக ப்ராணனுக்கு ப்ரக்ருதியான ஜலத்தில்-பரம்பரையாகவே மனஸ்ஸின்லயம் யுக்தமாகையால் ப்ராணனென்ற சொல்லால் ஜலம் (அப்பு) சொல்லப் படுகிறதென்று பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிறார்.

### (ஸூ) தந்மன: ப்ராண உத்தராத்

தந்மன: = ஸர்வேந்த்ரியங்களுடன் கூடியமனமானது ப்ராணனுடன் ஸம்யோகிக்கிறது. உத்தராத் = மன: ப்ராணே என்ற அடுத்த வாக்யமும் முக்ய ப்ராணனுடன் மனத்தின் ஸம்பந்தத்தைச் சொல்வதால் என்றபடி. இங்கு அன்னமயம் ஹிஸெளம்யமன: ஆபோமய: ப்ராண: என்ற ச்ருதியால் மன: ப்ராணங்களுக்கு மனமேப்ரக்ருதியென்பதும் அப்பே ப்ரக்ருதியென்பதும் இவை சொல்லப்படவில்லை, ஏனெனில், மனஸ்ஸு அஹங்காரத்திலிருந்து தோன்றியதாதலாலும், ப்ராணகாரணமாக ஆகாசத்திலிருந்து தோன்றிய- தாதலாலும், அன்னத்தால் மனத்திற்குத் திருப்தியும், ஜலத்தால் ப்ராணனுக்குத் திருப்தியும் சொல்லப்படுகின்றன. ஆகையால், முக்ய ப்ராணனிடத்தில் மனஸ்ஸு ஸம்யோகிக்கிறதென்று தேறிற்று.

## அத்யக்ஷ: ஸம்பவாத்

## 501 (ஸூ) ஸோऽத்யக்ஷே ததுபகமாதிப்ய:

மன: ப்ராணே, ப்ராண: தேஜஸி-என்கிற ச்ருதிக்ரமத்தை அனுஸரித்து சிந்திப்பதால் ஸங்கதி ஸ்பஷ்டமானது.

அந்த ப்ராணன் தேஜஸ்ஸிலும் ஸம்யோகிக்கிருன அல்லது ஜீவ-னிடத்தில் ஸம்யோகிக்கிருனு? என்று சம்சயம். ப்ராணஸ் தேஜஸி என்னும்-வசனத்தால் தேஜஸ்ஸில் தான் ஸம்யோகிக்கிருனென்று பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிருர். ஸ: = இந்த்ரிய ஸம்யுக்த மனோவிசிஷ்டனுன ப்ராணன், **அத்யக்ஷே** = இந்த்ரியாத்யக்ஷனுன ஜீவனிடம் ப்ராணனுக்கு அந்திம காலத்தில் சேர்க்கையும், அதற்குமுன் ஜீவனுக்கு அதீனமான ப்ரதிஷ்டாதி களும் ச்ருதியால் காட்டப்பட்டவை. ஆக, இந்த உபகமாதிகளால் என்றபடி, ஏவமேவ இமமாத்மானம் அந்தகாலே ஸர்வேப்ராணு அபிஸமாயந்தி, தமுத்க்ராமந்தம் ப்ராணோऽனூத்க்ராமதி. தஸ்மின் ப்ரதிஷ்டிதே ப்ரதிஷ்டித ஸ்யாதித்யாதய:- என்ற ச்ருதிகளுக்கு விரோதம் வாராமைக்காக உபகமாதி களாலே ஜீவனிடம் ப்ராணனுக்கு ஸம்யோகத்தை அங்கீகரித்துப்பின்னர் ப்ராண: தேஜஸி என்றபடி தேஜஸ்ஸில் ஸம்யோகம் சொல்வது பொருந்து மென்பது கருத்து. இதனால், யமுனை ஸாகரத்தையடைகிறதென்ருல், கங்கையுடன் கூடிச்செல்கிறது என்பதுபோல, ப்ராண: தேஜஸி என்கிற ச்ருதிக்கும், ஆத்மாவுடன் கூடியவனுகவே ப்ராணன் தேஜஸ்ஸுடன் ஸம்பந்திக்கிறதென்று கூறியதாயிற்று.

## 164 பூதாதிகரணம்

## 502 (ஸூ) பூதேஷு தச்ச்ருதே:

'ப்ராணன் தேஜஸ் என்று ப்ராணஸம்யுக்தனுன ஜீவனுக்கு தேஜஸ்ஸில் ஸம்பத்தி (ஸம்யோகம்) சொல்லப்பட்டது. அந்த ஸம்பத்தி தேஜோ மாத்திரத்திலா பூதாந்தரங்களோடு ஸம்பந்தங் கொண்ட தேஜஸ்ஸிலா என்று சிந்தையால் ஸங்கதி. ப்ராணன் தேஜஸ் என்னுமிடத்தில் ப்ராணவிசிஷ்ட ஜீவனுக்கு தேஜோமாத்ரத்தில் ஸம்யோகமா? அல்லது பூதங்கள் பிறவற்றுடன் சேர்ந்த தேஜஸ்ஸில் ஸம்யோகமா? என்று சம்சயம். தேஜஸி என்ற வசனத்தால் தேஜோமாத்ரத்தில் என்று பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிருர்.

### (ஸூ) பூதேஷு தச்ச்ருதே:

**பூதேஷு** = ப்ராணவிசிஷ்ட ஜீவன் பூதஸூக்ஷ்மங்களில் ஸம்பன்னன் ஆகிருன்.

தத்ச்ருதே: ப்ருதிவீமய:, ஆபோமய:, தேஜோமய: என்று ஸஞ்சரிக்கின்ற ஜீவனுக்கு ஸர்வபூதமயத்வம் ச்ருதிசித்தமாகையால் என்றபடி இத்தால் இதர பூதங்களோடு கலந்த தேஜஸ்ஸில் ப்ராணனுடன் கூடிய ஜீவனுக்கு ஸம்பத்தியென்றுகிறது.

## 503 (ஸூ) நைகஸ்மின் தர்சயதோஹி

ந ஏகஸ்மின்: பிறவற்றுடன் கலவாத பூதங்கள் தனித்தனி எக்கார்யத்திற்கும் பயன்படாதவையாதலின், ஒவ்வொரு பூதத்தில் க்ரமமாக சம்பந்திக்கிறதென்பது கூடாது. தர்சயதோஹி = தனித்தனியே கார்யாக்ஷமங்கள் என்ற அர்த்தத்தை ச்ருதியும் ஸ்ம்ருதியும் காண்பிக்கின்றன. தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதம் ஏகைகாம் கரவாணி, நாநாவீர்யா: ப்ருதக்பூதா: ததஸ்தே ஸம்ஹதிம்விநா நாசக்நுவன் ப்ரஜாஸ் ஸ்ரஷ்டும் அஸமாகம்யக்ருத்ஸ்னச: முதலியவை. ஆகையால் ப்ராணஸ்தேஜஸி என்று தேஜஸ்சப்தத்தால் பூதாந்தரங்களுடன் கலந்த தேஜஸ்ஸே சொல்லப்படுகிறது என்று கருத்து.

## 165 ஆஸ்ருத்யுபக்ரமாத்கரணம்

## 504 (ஸூ) ஸமாநாச ஆஸ்ருத்யுபக்ரமாதம்ருதத்வஞ்சாநுபோஷ்ய

இந்த உத்க்ராந்தி வித்வானுக்கும் - அவித்வானுக்கும் ஸமமா அல்லது வித்வானுக்கு மட்டுமா? என்று சிந்திக்கப்படுகிறதென்று ஸங்கதி

வித்வானுக்கு இங்கேயே அம்ருதத்வப்ராப்தியென்று ச்ருதி கூறுவதால் அவித்வானுக்குத்தான் என்று பூர்வபக்ஷம். யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமாயேஸ்ய ஹ்ருதிஸ்திதா: ।

அதமர்த்யோऽம்ருதோபவதி அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே ॥ என்று வித்வானுக்கு இங்கேயே அம்ருதத்வம் ச்ருதமாகையால் என்ற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார்.

## (ஸூ) ஸமாநாசாஸ்ருத்யுபக்ரமாதம்ருதத்வஞ்சாநுபோஷ்ய

ஸ்ருதி: = கதி, ஆஸ்ருத்யுபக்ரமாத் = அர்ச்சிராதிகதி ஆரம்பிக்கும் வரை; ஸமாநாச = வித்வானுக்கும், அவித்வானுக்கும் உத்க்ராந்தி சமமாகும். மூர்த்தன்ய நாடீப்ரவேசாத்பூர்வம் என்று கருத்து அம்ருதத்வஞ்ச = அதமர்த்யோऽம்ருதோபவதி என்று இங்கு கூறப்பட்ட அம்ருதத்வமானது, அனுபோஷ்யச = 'ச' சப்தம் உறுதிப்பொருளில் உள்ளது. சரீரேந்திரியாதி தாஹமின்றி அவையிருக்கும்போது காமாதிவிமோகரூபமாயும் உபாஸன

நிஷ்பத்தி ரூபமாயுமுள்ள அம்ருதத்வம்தான் இங்கு அடையப்படுவதே தவிர ஜீவன் முக்தியென்பது இல்லை. வித்வானுக்கு அர்ச்சிராதி கதியாலே ப்ரஹ்ம ப்ராப்தி ச்ருதமாயிருப்பதால், இங்கேயே முக்திசொன்னால் ச்ருதி விரோதம்வரும். அதுவாராமைக்காக முன்சொன்ன அர்த்தமே, அதமர்த்யோSம்ருதோபவதி என்பதற்குப்பொருள் என்று கொள்ளவேண்டுமாம். ச்ருதியின் அர்த்தமோ எனில்,

இதயத்திலுள்ள காமக்ரோதாதிகள் எக்காலத்தில் விடப்படுகின்றனவோ அதேகாலத்தில் உபாஸனம் ஆரம்பிக்கப்பட்டுவிடுகிறபடியால் காமாதி-விமோசனத்தின் பிறகு புருஷன் இங்கேயே அம்ருதத்வம் பெற சாதனமான உபாஸனத்தையடைகிருன் - பின் அர்ச்சிராதிகதியாலே ப்ரஹ்மத்தையடைகிருன் என்பதாம். இதில் மற்ருெரு விளக்கப்படி இங்குதானே உபாஸனத்தில் நிரதிசய யோக்யமான ப்ரஹ்மத்தையனுபவிக்கிருன் என்று பொருள்.

## (ஸூ) ததாபீதே: ஸம்ஸாரவ்யபதேசாத்

*தத்* = அந்த அம்ருதத்வமானது முன்சொன்னப்ரகாரமே தவிர வேறு ப்ரகாரமன்று. ஏனெனில், *ஆபீதே: ஸம்ஸாரவ்யபதேசாத்* = ப்ரஹ்மப்ராப்தி வரை ஸம்ஸாரமென்றே சரீரஸம்பந்தமடியாக வழங்கப்படுவதாலென்றபடி, ஆகவே அர்ச்சிராதிகதியால் தேகவிசேஷத்தையடைந்து எப்போது ப்ரஹ்மம் அடையப்படுகிறதோ அதுவரை சரீரஸம்பந்த ரூபமான ஸம்ஸாரம் வழக்கிலுள்ளமையால் இங்கு சொன்ன முக்தி முன்கூறியபடியேயாகும்.

ஸ்தூல தேஹத்திலிருந்து உத்க்ராந்தனுக்கு சரீரஸம்பந்தம் எப்படியென்ருல் அதுபற்றிக் கூறுகிருர்.

## (ஸூ) ஸூக்ஷ்மம் ப்ரமாணதச்ச ததோபலப்தே:

*ஸூக்ஷ்மம்* = சூக்ஷ்மசரீரமானது அனுவர்த்திக்கிறது. இந்த அனுவர்த்தனம் அர்ச்சிராதிகதிபற்றிச் சொல்லியதால் மட்டும் தோன்றவில்லை. *ப்ரமாணதச்ச* = ப்ரமாணத்தாலும், *ததா உபலப்தே:* ஸூக்ஷ்மசரீரமுள்ளவனுகக் காணப்படுவதால், என்றபடி, ப்ரமாணமாவது அர்ச்சிராதி மார்க்கத்தால் சென்ற வித்வானுக்கு சந்த்ரனுடன் ஸம்வாதம் (தம் ப்ரதிப்ரூயாத் ஸத்யம் ப்ரூயாத் முதலியவற்ருல்) ச்ருதமாகையால், அந்த ஸம்வாதம் சரீரமில்லாதவனுக்கு அசம்பாவிதமானபடியால் ஸூக்ஷ்ம சரீரம் தொடர்கிறது என்று கருத்து.

## (ஸூ) நோபமர்த்தேநாத:

*அத:* முன் சொன்ன காரணங்களால் *நோபமர்த்தேநாத* = அதமர்த்யோSம்ருதோபவதி என்ற வசனம் சரீர உபமர்த்தத்தாலுண்டான அம்ருதத்

வத்தைச் சொல்லவில்லை. உபாஸனாரம்பாதிரூப அம்ருதத்வம்பற்றியே சொல்கிறது என்பதாம்.

### (ஸூ) அஸ்யைவ சோபபத்தே ரூஷ்மா

*அஸ்ய*= இந்த ஸூக்ஷ்ம சரீரத்துக்கு **உபபத்தேச்ச** = ஓரிடத்திலிருப்ப தாகிய யுக்தியாலும் ஏற்றவாறு, இதனால், தேஹ ஸம்பந்த உபமர்த்தத்தா லுண்டான முக்தியன்று. ஸூக்ஷ்மதேஹம் உள்ளதில் ப்ரமாணம், ***ஊஷ்மா:*** மரணத்திற்குத் தயாரான வித்வானின் ஸ்தூல சரீர ஏகதேசத்தில் தோன்றும் ஊஷ்மாவானது, ஸூக்ஷ்ம சரீரத்தின் குணமே தவிர ஸ்தூல சரீர குணமன்று. ஏனெனில், ஸ்தூல தேகத்தில் (தேகாந்தரத்தில்) ஊஷ்மா புலப்படாமையால் என்று கருத்து. இப்படி ஸித்தமான ஏதோவோரிடத்திலுள்ள ஊஷ்மாவினால் அனுமானிக்கப்பட்ட ஸூக்ஷ்மசரீரத்துடன் உத்க்ராந்தியையடைகிறான் என்பதாம். (ஊஷ்மா = வெப்பம்)

### (ஸூ) ப்ரதிஷேதாதிதி சேந்ந சாரீராத் ஸ்பஷ்டோஹ்யேகேஷாம்

திரும்பவும் வித்வானுக்கு உத்க்ராந்தி கிடையாதென்று சங்கித்து விடை கூறப்படுகிறது. வாஜஸநேயகத்தில் ஸஏதாஸ்தேஜோ மாத்ரா: ஸமப்யாததாந: என்று தொடங்கி, இதிது காமயமான: என்பதீருக அவித்வானின் உத்க்ராந்தி முறையையும் லோகாந்தரகமனத்தையும் - திரும்பி வரும் ப்ரகாரத்தையும் கூறி - அதாகாமயமான: - நதஸ்யப்ராணா உத்க்ராமந்தி ப்ரஹ்மைவஸன்ப்ரஹ்மாப்யேதி என்று வித்வானுக்கு உத்க்ராந்தியை நிஷேதிக்கையால் இங்கே ஜீவன் முக்தனுகையாலே முன்சொன்ன அர்த்தம் பொருந்தாது என்றால் அதல்ல. (இதிசேத் ந) முன்சொன்ன உத்க்ராந்தி வித்வானுக்கும் பொருந்தும் என்பதாம். ஏனெனில், ***சாரீராத்***= சாரீரகுண ஜீவனிடமிருந்து ப்ராணன்களுக்கு விசேஷம், 'நதஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி' என்றுள்ள ச்ருதியில் நிஷேதிக்கப்பட்டிருப்பதால் என்பதாம். *தஸ்ய* = அகாமயமானனை வித்வானின் ப்ராணன்கள் அவனைவிட்டுப் பிரிவதில்லை. ஆனால் தேவையான மார்க்கத்தால் செல்லும் வித்வானின் உபகாரகங்களாகக் கூடவே போகின்றன என்பது ச்ருதியின் பொருள் — இதனால், ஜீவனின் உத்க்ராந்தி நிஷித்தையன்று என்பதாம். ***ஸ்பஷ்டோஹ்யேகேஷாம்***- இவ்வர்த்தம் மாத்யந்தின சாகிகளின் பாடத்தில் ஸ்பஷ்டமாகவே காணப்படுகிறது. யோ஽ காமோ நிஷ்காம: ஆப்தகாம: ஆத்மகாம: ந தஸ்மாத் ப்ராணா உத்க்ராமந்தி என்று தச்சப்தம் ஐந்தாம் வேற்றுமையுடன் காணப்படுவதால் - காண்வர் களின் பாடத்திலுள்ள "ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி" என்கிற விடத்திலும் ஆறாம் வேற்றுமையுள்ள தச்சப்தம் ஐந்தாம் வேற்றுமைப் பொருளிலேயுள்ளது என்று தீர்மானிக்கப்படுகிறது. அகாம: முதலிய மூன்று

பதங்களும். ஈஷணாத்ரயத்தின் தியாகத்தைக் குறிப்பவையாம். *ஆத்மகாம:* = பரம புருஷப்ராப்திகாமன் என்றபடி.

## (ஸூ) ஸ்மர்யதேச

*வித்வானுக்கு மூர்த்தன்யநாடியால் உத்க்ராந்தி, ச்ருதியில் ஸித்தமானது* "ஊர்த்த்வ மேகஸ்ததஸ்தேஷாம் யோபித்வா ஸூர்யமண்டலம். ப்ரஹ்மலோகமதிக்ரம்ய தேநயாதி பராம் கதிம்" என்பது ஸ்ம்ருதி.

# பரஸம்பத்யதிகரணம்

## (ஸூ) தாநிபரேததாஹ்யாஹ

இந்த்ரியஸமூஹத்தோடும் ப்ராணனேடும் கூடின ஜீவனுக்குஉத்க்ராந்தி வேளையில் தேஜஸ் முதலிய பூதஸூக்ஷ்மங்களில் ஸம்யோகம் சொல்லப் பட்டது. அந்தஸம்யோகம் வித்வானுக்குக் கிடையாது என்று சங்கித்துப் பரிஹரிக்கப்பட்டது. இப்போது அந்த பூதஸூக்ஷ்மங்கள் ஜீவனுடன் தழுவியவையாய் அவனவன் செய்த கர்மத்தையும் - வித்யையையும் அநுஸரித்து தங்கள் கார்யத்திற்காகப் போகின்றனவா அல்லது பரமாத்மாவிடன் ஸம்பன்னங்களாகின்றனவா என சிந்திக்கப்படுகிறது என்று ஸங்கதி

பரமாத்மாவுடன் ஸம்பத்தியேற்பட்டால் ஸுகதுக்க போகமெனும் கார்யமில்லாமையால் அந்த உபபோகத்தையனுஸரித்து அவனவன் கர்மத்துக்கும் - வித்யைக்கும் பொருத்தமாகவே பூத ஸூக்ஷ்மங்கள் போகின்றனவென்று பூர்வபக்ஷம். தேஜ: பரஸ்யாம் தேவதாயாம் என்னும் ச்ருதிக்கு உபபத்தியாது என்றால். எல்லா பதார்த்தங்களுமே பரதேவதா கார்யமாதலின், ததாத்மகங்களாகையால் சேரவேண்டிய இடமும் பரஸ்யாம் தேவதாயாம் என்று சொல்லப்படுகிறதென்று உபபத்தி. இந்த பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிறார். 'தாநிபரே' என்று *தாநி* ஜீவாதிஷ்டிதங்களான பூதஸூக்ஷ்மங்கள் *பரே* பரதேவதையிடமேஸம்பன்னமாகின்றன. *ததாஹ்யாஹ* ச்ருதி "தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்" என்று தானே சொல்கிறது. இந்தச்ருதியின் பொருள் பொருந்துவதற்காக உத்க்ராந்தியால் ஏற்பட்ட ஆயாஸம் தீருவதே ஜீவனுக்குப் பரமாத்மஸம்பத்தியாலான பலன் என்று கல்பிப்பது பொருத்தமானது

# அவிபாகாதிகரணம்

## (ஸூ) அவிபாகோவசநாத்

*கீழ்ச்சொன்ன* பரமாத்மாவிடம் ஸம்பத்தியென்பது ப்ராக்ருதலயம்போல் காரணபத்திருபமா அல்லது வாக் மனஸ்ஸம்பத்திபோலே பிரிக்கமுடியாத

தன்மையாவென்று சம்சயம், பரமாத்மா ஸர்வகாரணமாகையாலும். அதில் ஸம்பத்தி சொல்வதாலும் காரணுபத்திதானென்று பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிருர். "அவிபாகோऽசநாத்" என்று, வாங்மனஸி ஸம்பத்யதே என்கிற-விடத்தில் ச்ருதமான ஸம்பத்தி சப்தத்திற்கே எங்கும் தொடர்பு (அனுஷங்கம்) கூடுவதால், அனேக இடங்களில் ஒரே ப்ரகரணத்தில் அனுஷக்தமான சப்தத்திற்கு வெவ்வேறு பொருள் கூறுவதில் ப்ரமாணம் இல்லாமையால் இங்கும் ஸம்பத்தி சப்தத்திற்கு அவிபாகம் (விட்டுப்பிரிக்க முடியாததன்மை) என்றே பொருள். ஏனெனில், அவசனுத் = மறுபடி ஸ்ருஷ்டி பற்றிய வசனம் இல்லாமையால் என்றபடி. ஆகவே ஜீவனோடு தழுவிய பூதஸூக்ஷ்மங்களுக்குப் பரதேவதையோடு விட்டுப்பிரியாமையே ஸம்பத்தியென்று ஸித்தம்.

## ததோகோதிகரணம்

## (ஸூ) ததோகோऽக்ர ஜ்வலனம் தத்ப்ரகாசிதத்வாரோ வித்யாஸாமர்த்யாத் தச்சேஷகத்யனு ஸ்ம்ருதியோகாச்ச ஹார்தானுக்ருஹீத: சதாதிகயா

இவ்வாறு கமனம் தொடங்கும்வரை வித்வானுக்கும் அவித்வானுக்கும் உத்க்ராந்திப்ரகாரம் சமமாகவே கூறப்பட்டது. இப்போது வித்வானுக்கு ஓர் விசேஷம் கூறப்படுகிறதென்று ஸங்கதி. சதஞ்சைகாச - என்றச்ருதியில் 101. ஆவதான மூர்த்தன்ய நாடீ வழியாக வித்வானுக்குக் கமனம் சொல்லும் நியமம் கூடுமா கூடாதாவென்று சம்சயம். நாடிகள் மிக நுட்பமாயிருப்பதால் பிரித்-தறிவது கடினம். ஆகலின், நியமம் கூடாது. மேலும் இந்தச்ருதிவசனம் யதேச்சையாக எற்படும் ப்ரஹ்மநாடீவழியை அனுவாதம் செய்கிறது என்ற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிருர். (ஸூ) ததோகோऽக்ர ...= சதாதிகயா

வித்யையின் சாமர்த்யத்தால்: ஹ்ருதயகமலத்தில் வீற்றிருக்கும் பரம புருஷனின் ஆராதனரூபமான வித்யையின் ஸாமர்த்யத்தால், தச்சேஷகத்யனு ஸ்ம்ருதி யோகாச்ச = அவ்வித்யைக்கு அங்கமான அர்ச்சிராதி கதி சிந்தனத்தாலும் ப்ரீதனை, ஹார்த்தானுக்ரஹீத: ஹ்ருதய கமலவர்த்தியான அந்தர்-யாமியாலே அனுக்ரஹிக்கப்பட்டவனுய் அவ்வனுக்ரஹத்தால், ததோக: அந்த ஜீவனின் ஸ்தானமாகிறஹ்ருதயம், அக்ரஜ்வலனம் = முன்புறம் ப்ரகாசமுள்ள தாகிறது. தத்ப்ரகாசிதத்வார: = அவ்வாறு ப்ரகாசப்படுத்தப்பட்ட நாடீத்-வாரத்தையுடையவனுய், சதாதிகயாகச்சதி = 101-வது மூர்த்தன்ய நாடீயால் செல்கிருன். பரமாத்மா ஹார்தன் (ஹ்ருதயவாஸீ) என்பது. தஸ்யாச்சிகாயா மத்யே பரமாத்மாவ்யவஸ்தித: என்றும், "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:" என்றும் விளக்கப்படுகிறது. ஆகவே மூர்த்தன்யநாடியானது மிக நுட்பமாய் அறிவதற்கு அரிதாயிருந்தாலும் உபாஸகனிடம் ப்ரீதனை

பகவானின் அனுக்ரஹத்தால் பிரகாசிப்பதால் வித்வான் அவ்வழியே சுலபமாய்ப் போகிறானென்பதாம்.

## ரச்ம்யனு ஸார்யதிகரணம்

### (ஸூ) ரச்ம்யனுஸாரீ

ஹ்ருதயத்திலிருந்தும் மூர்த்தன்யநாடி வழியாக வெளிவந்த வித்வானுக்கு சூர்ய கிரணங்களைத்தொடர்ந்து கமனம் சிந்திக்கப்படுகிறதென்று ஸங்கதி.

அதயத்ரைதஸ்மாத் சரீராத் உத்க்ராமதி அதை தைரேவ ரச்மிபி: ஊர்த்வமாக்ரமதே என்று வித்வான் சூர்யனின் கிரணங்களையனுசரித்தே போகிறான் என்ற நியமம் கூடுமா கூடாதா என்று சம்சயம். இரவில் இறந்த வித்வானுக்கு ஸௌர்யகிரணம் ஸம்பவிக்காது. ஆதலின், இந்த நியமம் கூடாதென்று பூர்வபக்ஷம். பின் அந்த வாக்கியத்திற்குக்கதியேது என்னில், ஒரு சமயம் நேரக்கூடிய கதியை அனுவாதம் செய்வதாகவே கொள்ளவேண்டும் என்கிறார் இதனை நிரஸிக்கிறார். *ரச்ம்யனுஸாரீ* என்று வித்வான் கிரணத்தையனுஸரித்தே செல்கிறான் என்ற நியமம் பொருந்தும். இரவிலும் கோடைக்காலத்தில் வெப்பம் காணப்படுவதால், அதற்குக் காரணமான கிரணம் இருப்பதில் சந்தேஹமில்லை. பனிக்கால இரவில் வெப்பம் பனியின் மிகுதியால் தோன்றாவிட்டாலும், மேகம் மூடிய துர்த்தினத்தில் கிரணங்கள் உள்ளதை ஏற்பதுபோல இங்கும் ஏற்கவேண்டும், ஆகையால், இரவிலும் கிரணம் உண்டென்பதால் அதையனுஸரித்தே செல்கிறானென்று நியமம் பொருந்தும். ஒரு ஸமயம் கிட்டுவதான கதியை அனுவாதம் செய்வதால் நியமம் கூடாது. என்றால் அதை தைரேவ என்று ஏவகாரத்திற்கு விரோதம் - பயனின்மை ஏற்படும்.

### (ஸூ) நிசிநேதிசேந்ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹ பாவித்வாத் தர்சயதிச

இரவில் இறந்தவனுக்கும் கதிக்கு சாதனமாக ஸௌர்ய கிரணங்களிருக்கட்டும். ஆயினும், ப்ரஹ்மவித்துக்களுக்கு இரவில் மரணம் சாஸ்த்ரநிஷித்தமாகையால், அவர்களுக்கு இரவுமரணமே ஸம்பவிக்காதென்று சங்கையால் சங்கதி.

இரவில் இறந்த வித்வானுக்கு ப்ரஹ்மப்ராப்தி உண்டா இல்லையா என்று சம்சயம்.

திவாச சுக்லபக்ஷச்ச உத்தராயணமேவச ।
முமூர்ஷதாம் ப்ரசஸ்தாநி விபரீதந்து கர்ஹிதம் ॥

என்று இரவில் மரணம் இகழப்பட்டிருப்பதால், கீழானகதிக்கு ஹேதுவாகை யாலே ப்ரஹ்மப்ராப்தி கிட்டாது என்ற பூர்வபக்ஷத்தை நிரஸிக்கிருர்.

***நிசி நேதிசேந்ந*** = இரவில் மரித்தவனுக்கு முக்தியில்லை என்பது சரியல்ல. ஏனெனில், ***ஸம்பந்தஸ்ய யாவத் தேஹபாவித்வாத்*** = அநாரப்தகார்யங்களான ஸஞ்சித கர்ம ஸம்பந்தங்கள் வித்யையால் நசித்தபோதும், ப்ராரப்த கர்மாக் களில் ஸம்பந்தம் இறுதிவரை நிற்பதாதலின், அந்தவுடலின் இறுதி இரவிலும் ஸம்பவிக்கலாம். ஆதலின், இதற்கு மேலான பந்தகம் இல்லாமையாலும் இரவில் இறந்தவனுக்கும், ப்ரஹ்மப்ராப்தியில் விரோதமில்லை. *தர்சயதிச* = தஸ்யதாவதேவசிரம் என்கிற ச்ருதியே இவ்வர்த்தத்தை காட்டுகிறது. இரவில் மரணம் தடுக்கப்பட்டது, அவித்வான்களுக்கேயன்றி ப்ரஹ்மவித்துக்களுக் கில்லை.

## தக்ஷிணயனுதிகரணம்

### (ஸூ) அதச்சாயநேऽபி தக்ஷிணே

தக்ஷிணயனத்தில் இறந்தாலும் பந்தஹேதுக்களில்லாமையாலே ப்ரஹ்மப்ராப்தியில் விவாதமில்லை. தக்ஷிணயநந்தில் மரித்தவனுக்கு சந்த்ர ஸாயுஜ்யப்ராப்தியென்பது விச்ரம ஸ்தானத்தைக்குறிப்பதேயாகும். வித் வானுக்கு திரும்பிவருவதென்பது இல்லாமையால், திரும்பி வருதலென்னும் வசனம் அவித்வானைப்பற்றியதாம்.

யத்ரகாலேத்வநாவ்ருத்தி மாவ்ருத்திஞ்சைவ போகிந: முதலிய கீதா வாக்யத்தாலே முமுக்ஷுவான வித்வானுக்கு புநராவ்ருத்தி, அபுநராவ்ருத்தி- களுக்கு ஹேதுவான கால விசேஷம் கூறப்பட்டதால் தக்ஷிணயனத்தில் இறந்தவன் திரும்பி வருவதாகத் தோன்றுகிறதேயென்பதற்கு உத்தரம் அருளிச்செய்கிருர்.

### (ஸூ) யோகிந: ப்ரதிஸ்மர்யேதே ஸ்மார்த்தேசைதே

***யோகிந: ப்ரதி*** = ப்ரஹ்மவித்யா நிஷ்டர்களைக்குறித்து, *ஏதே* = இந்த தேவயானம் பித்ருயானம் என்ற வழிகள்; ***ஸ்மார்த்தே*** ஸ்மரிக்கப்படுகின்றன. தினந்தோறும் நினைக்கத் தக்கவையாக ஸ்ம்ருதிகள் கூறுகின்றன,

> யத்ரகாலேத்வநாவ்ருத்திம் ஆவ்ருத்திஞ்சைவயோகிந: | எனத்தொடங்கி
> நைதேஸ்ருதீ பார்த்த ஜானன் யோகீ முஹ்யதிகச்சந |

தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோபவார்ஜுந என்று தேவயான பித்ருயான மார்க்கங்கள் தினமும் சிந்திக்கத்தக்கவையென்று ஸ்ம்ருதியில் விதிக்கப்படுகிறது. இதனல் முமுக்ஷுவுக்கு மரணகாலம் விதிக்கப்-

படவில்லையென்பதாம். 'யத்ரகாலே' என்பதில் காலே என்ற பதம் காலத்திற்கு அபிமானியான ஆதிவாஹிக தேவதையைக் குறிப்பது. இச்சூத்திரத்தில் யோகிபதம் நால்வகை யோகிகளைக் குறிக்கிறது.

1. முமுக்ஷுயோகிக்குத் தேவையான சிந்தனமும்
2. ஐச்வர்யாத்யர்த்தியோகிக்கு பித்ருயான சிந்தனமும்.

என்று பிரிவு, 'யோக யுக்தோ பவார்ஜுன' என்றவிடத்தில் யோகசப்தம்-மார்க்கானுஸந்தானமாகிய யோகத்தைக்குறிப்பது என்பது திருவுள்ளம். இந்தப்பாதத்திலுள்ள பதினொரு அதிகரணங்களின் சாரமான கருத்தை ஸ்வாமி தேசிகன் அருளுகின்றார்.

1 வாகதிகரணத்தில் - வாக்கு முதலிய பாஹ்யேந்திரியங்களுக்கு மனஸ்ஸில் ஸம்பத்தியும்,

2 மனோதிகரணத்தில் இந்த்ரியவிசிஷ்ட மனஸ்ஸுக்கு ப்ராண வாயுவில் ஸம்பத்தியும்,

3 அத்யக்ஷாதிகரணத்தில் ப்ராணங்களுக்கு தேஹாத்யக்ஷனான ஜீவனிடத்தில் ஸம்பத்தியும்,

4 பூதாதிகரணத்தில் ஜீவனுக்குப் பூதஸௌக்ஷ்மத்திலே ஸம்பத்தியும்,

5 ஆஸ்ருத்யுபக்ரமாதிகரணத்தில் வித்வானுக்கும், மற்றோருக்கும் உத்க்ராந்தி ஸமமென்றும் ஸம்பத்தியும்,

6 பரஸம்பத்தியதிகரணத்தில் பூதஸௌக்ஷ்மம் தழுவிய ஜீவனுக்குப் பரமாத்மாவிடம் களைப்பாற ஸம்பத்தியென்றும்,

7 அவிபாகாதிகரணத்தில் பரமாத்மாவிடம் ஸம்பத்தியென்பது ஸம்பந்தமேயென்றும்,

8 ததோகோதிகரணத்தில் வித்வானுக்கு ப்ரஹ்மநாடி வழியே உத்க்ராந்தியும்,

9 ரச்ம்யனுஸார்யதிகரணத்தில்-அர்ச்சிராதிகமனம் சூர்யகிரணங்களைப் பற்றியென்றும்,

10 நிசாதிகரணத்தில் - இரவில் ம்ருதனான வித்வானுக்கும் முக்தியுண்டென்றும்,

11 தக்ஷிணாயநாதிகரணத்தில் தக்ஷிணாயனத்தில் ம்ருதனான முமுக்ஷுக்கும் முக்தியுண்டென்றும் இந்த பாதத்தில் விளக்கப்பட்டன.

# நான்காம் அத்தியாயம் மூன்றும் பாதம்

## அர்ச்சிராத்யதிகரணம்

### (ஸூ-1) அர்ச்சிராதிநு தத்ப்ரதிதே:

வித்வானுக்கு அர்ச்சிராதி மார்க்கத்தில் ஆதிவாஹிக தேவதைகளால் செய்யப்படும் உபசாரரூபமான ப்ரஹ்மவித்யாபலத்தை மூன்றும் பாதத்தில் நிரூபிக்கிருர் என்று ஸங்கதி.

இப்படி தேஹத்திலிருந்து வெளிக்கிளம்பிய வித்வானுக்கு மூர்த்தன்ய நாடியாலேகதி தொடங்குவது முன்பாதத்தில் கூறப்பட்டது. இந்த பாதத்தில் மார்க்கம் நிரூபிக்கப்படுகிறதென்று ஸங்கதி.

சாந்தோக்யத்தில், உபகோஸல வித்யையில் - யதா புஷ்கரபலாசே ஆபோந ச்லிஷ்யந்தே என்று தொடங்கி அத யதுச ஹாஸ்மின் சவ்யம் குர்வந்தி யதுசந தே஽ர்ச்சிஷமபிஸம்பவந்தி - அர்ச்சிஷோ஽ஹ: என்றாரம்பித்து இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே என்று அர்ச்சிராதிகதி கூறப்பட்டுள்ளது. மேலும், அதில் எட்டாம் அத்தியாயத்தில் - தஹர வித்யையில், அதைதைரேவ ரச்மிபி ராக்ரமதே என்னும் கௌஷீதகிசாகையிலும் அர்ச்சிராதி மார்க்கம் வேறு விதத்தில் ஓதப்படுகிறது. ஸ ஏதம் தேவயானம் பந்தானம் ஆபத்ய அக்னிலோக மாகச்சதி முதலியவகையில் இப்படியே. ப்ருஹதாரண்யகத்திலும், ஏவமேதத்வித்: யேசேமே஽ரண்யே ச்ரத்தாதப இத்யுபாஸதே-தே஽ர்ச்சிஷமபிஸம்பவந்தி என்று கூறப்பட்டுள்ளது. அதிலேயே வேருரிடத்தில் யதாவை புருஷோ஽ஸ்மாத் லோகாத்ப்ரைதி ஸவாயுமாகச்சதி என்று பல கூறப்படுகின்றன. இந்த ச்ருதிகளால் ஒரே அர்ச்சிராதிமார்க்கம் கூறப்படுகிறதா-அல்லது வேறுமார்க்கங்களும் கூறப்படுகின்றனவா? வித்வான் ஒரே அர்ச்சிராதி மார்க்கத்தால் செல்கிருனு? பல மார்க்கங்களாலும் செல்கிருனு? என்று சம்சயம். சாந்தோக்ய வாஜஸநேய-காதிகளில் பலமார்க்கங்கள் கூறப்பட்டுள்ளமையால்-அந்தந்த மார்க்கங்களுக்கு ப்ரஹ்ம ப்ராப்தியில் பரஸ்பரம் அபேக்ஷயில்லை பற்பலமார்க்கங்கள் தோன்றுவதால் விகல்பம் என்று பூர்வபக்ஷம். அதனை நிரஸிக்கிருர். ஸூ அர்ச்சிராதிநு தத்ப்ரதிதே:

***அர்ச்சிராதிநு***=வித்வான் அர்ச்சிராதி மார்க்கத்தாலே தான் போகிருன். ***தத்ப்ரதிதே:***—எல்லா ச்ருதிகளிலும் அதற்கே ப்ரஸித்தியிருப்பதால் என்றபடி. அந்தந்தச்ருதியிலும், அர்ச்சிராதிகளில் அடங்கிய ஆதித்யாதியர்கள் விளக்கப் படுவதால் அதுவேயிதுயென்று ஒரே மார்க்கம் அடையாளமாகக் காட்டப் படுவதாலும் ஓரிடத்தில் கூறிய விசேஷங்களும் கூறப்படாதவிடத்தில் உபஸம்

ஹாரம் ( சேர்த்து அனுஸந்தானம்) செய்யப்படுவதாலும் எல்லாச்ருதிகளிலும் அர்ச்சிராதி மார்க்கமொன்றுதான் வித்வானுக்குரியதென்று தேறிற்று.

இங்கு முக்கியமானது உலகிலும் வேறுப்ரமாணங்களிலும் பல மார்க்கங்கள் ப்ரஹ்மப்ராப்திக்குக் காணப்படுவதால் அவ்விஷயத்தில் அர்ச்சிராதி மார்க்கமேயென்று நியமம் கூறுவது எவ்வாறு பொருந்தும்? என்றால் சில ப்ரஹ்மவித்துக்களுக்கு மார்க்காந்தரத்தாலும் ப்ரஹ்ம ப்ராப்திக்கான ப்ரமாணம் இருப்பதாம். முன் சொன்ன அர்ச்சிராதி மார்க் கத்தால் கமனம், சில ப்ரஹ்மவித்துக்களுக்கானதென்று வ்யவஸ்தை செய்யப் பட்டுள்ளதாகப் பொருந்தும் என்பது ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவுள்ளமாம்.

சிசுபாலாதிகள், நற்பாலயோத்தியின் சராசரங்கள், புண்டரீ, பீஷ்மாதிகள், விபவாவதார வ்யூஹாவதார லோகத்தவர், ப்ரஹ்மாக்கள், அவர்களின் புத்ரர்கள், போன்றவர் பற்பல வழிகளில், ப்ரஹ்மத்தை அடைந்துள்ளனர். அவரவர் அதிகாரத்திற்கு ஏற்ப மார்க்கங்களும் பலபல என ஸ்வாமி தேசிகன் அருளினர். ஆதலால், ஸாமான்யமான அர்ச்சிராதி கதியின் உபதேசத்தை மட்டும் கொண்டு விசேஷமாகச் சிலருக்கேற்படும் கதிவிசேஷங்களைப் பாதிக்கவியலாது என்பதாம்.

## வாய்வதிகரணம்

## (ஙஉ) வாயுமப்தாத் அவிசேஷ விசேஷாப்யாம்

அர்ச்சிராதி மார்க்கத்தால் வித்வான் போகிறன். என்று சொல்லப் பட்டால், இப்போது அந்த அர்ச்சிராதிகளுக்கு க்ரமத்தை நிருபிப்பதே ஸங்கதி. சாந்தோக்யத்தில், ஸம்வத்ஸரத்திற்கும் ஆதித்யனுக்கும் நடுவில் வாயு நிர்த்திஷ்டன். ப்ருஹதாரண்யகத்தில் மாஸத்திற்குப்பிறகு தேவலோகம் நிர்த்திஷ்டம். இவ்விடத்தில் சாந்தோக்யத்தில் சொன்ன ஸம்வத்ஸரத்தை மாஸத்திற்குப்பிறகு வைக்கவேண்டும். இப்படி இரண்டிடங்களிலும் ஸம்வத்ஸ ரத்திற்கும் ஆதித்யனுக்கும் மதத்தியில் நிர்த்திஷ்டங்களான வாயு, தேவலோக சப்தங்கள் ஒரே பொருளுள்ளவையா - வெவ்வேறு பொருளுள்ளவையா என்று சம்சயம். அவை வெவ்வேறு பொருளுள்ளவையாதலின், வாயுவிற்கும் பின் தேவலோகம் சென்று பின் ஆதித்யனையடைகிறனென்று பூர்வபக்ஷம். இத்தை நிரஸிக்கிறர். வாயுமப்தாத்; ***அப்தாத்*** - ஸம்வத்ஸரத்துக்குமேல் - ஆதித்யனுக்குக்கீழ் ***வாயும்*** - வாயுவை மட்டும் வைக்கவேண்டும். ஏனெனில், ***அவிசேஷ விசேஷாப்யாம்*** - பொதுவாயும் சிறப்பாயுமுள்ள சொற்களால் என்றபடி. இங்கு தேவலோக சப்தம் ஸாமான்யம். வாயுசப்தம் விசேஷம் தேவலோகசப்தத்தால் - தேவர்களின் வாஸஸ்தானம் என்ற காரணத்தால் வாயுவே கூறப்படுகிறது. அதுவே விசேஷமாகும். இவ்விரண்டு சப்தங்களும்

ஒரேபொருளைக் கூறுவதாலே ஸம்வத்ஸரத்துக்குமேல் வாயுவை மட்டிலும் அதற்குமேல் ஆதித்யனையும் குறிப்பதே சரியான க்ரமமாகும் என்பது கருத்து. யோயம் பவதே ஏஷ தேவாநாம் ப்ரிய:- என்னும் ச்ருதி இதற்கு ப்ரமாணமாகும்.

## வருணாதிகரணம்

## (ஸூ) தடிதோ(அ)தி வருணஸ் ஸம்பந்தாத்

இங்கும் ஆதிவாஹிக க்ரமசிந்தையேயென்று ஸங்கதி: சாந்தோக்யத்திலும், வாஜஸனேயகத்திலும் ஸர்வசாகாப்ரத்யயந்யாயத்தாலே அர்ச்சஸ், அஹஸ், பூர்வபக்ஷம், உத்தராயணம், ஸம்வத்ஸரம், வாயு, ஆதித்யன், சந்த்ரன், மின்னல், வருணன், இந்த்ரன், ப்ரஜாபதி என்ற பன்னிரண்டு தேவதைகளும், அர்ச்சிராதிகள் என்று ப்ரசித்தர்கள். அவர்களுக்குள் வாயுவரை ச்ருதி முதலியவற்றின் க்ரமம் கூறப்பட்டது. வருண, இந்த்ர, ப்ரஜாபதிகளுக்கு மின்னலுக்கு மேலே இடம் குறிப்பது சரியா? என்று சம்சயம். ஸவாயுலோகம், ஸவருணலோகம்; என்று கௌஷீதகியின் பாடக்ரமப்படி, வாயுவுக்குமேல் வருணனுக்கும் வருணனுக்குமேல் இந்த்ரபரஜாபதிகளுக்கும் வைப்பு பொருந்தும் என்பது பூர்வபக்ஷம்.

இத்தை நிரஸிக்கிறார். (ஸூ) தடிதோ(அ)தி வருணஸ் ஸம்பந்தாத் 1 வருண தடிதோ அதி - வருணன் மின்னலுக்மேலே வைக்கத் தக்கவன். ஸம்பந்தாத் - இருவருக்கும் ஸம்பந்தமிருப்பதால், மின்னல்கள் மேகத்திலும் இருப்பதால் - அதிலேயேயிருக்கும் ஜலத்திற்கு வருணன் அதிஷ்டான தேவதையாதலின், இருவருக்கும் ஸம்பந்தம தோன்றுகிறது. ஆகையால், கௌஷீதகீ பாட க்ரமத்தைக் காட்டிலும் - மேகத்தினுள் இருப்பு என்ற ஸம்பந்தக்ரமம் பலமுள்ளதாதலின், மின்னலுக்குமேல்தானே வருணனை வைக்க வேண்டும். அதனால் ஸஏநாந் ப்ரஹ்ம கமயதி என்கிறபடியே வித்யுத தேவதையான அமானவனுக்குச் சொன்ன ப்ரஹ்ம கமயித்ருத்வம் (ப்ரஹ்மத்தையடைவிக்கும் தன்மை) வருணனை வைப்பதால் இடையீட்டைப் பொறுக்கக்கூடியது என்று தோன்றுகிறது. ஆகையால், இந்த்ராதிகளுக்கு வருணனுக்குமேலேயே இடம் வைப்பது உசிதம். ஆகவே, அக்னியில் தொடங்கி ப்ரஜாபதிவரை பன்னிரண்டு ஆதிவாஹிக தேவர்களுக்கும் க்ரம விசேஷம் சித்திக்கிறது.

## ஆதிவாஹிகாதிகரணம்

## (ஸூ) ஆதிவாஹிகாஸ் தல்லிங்காத்

அர்ச்சிராதிகள் மார்க்கத்தின் அடையாளமானவர்களா? அல்லது போகஸ்தானங்களா? அல்லது ப்ரஹ்மத்தையடைய விரும்பும் வித்வான்களை அழைத்துச் செல்லும் ஆதிவாஹிகர்களா? என்று சிந்திக்கப்படுகின்றதென

**ஸங்கதி.** **அர்ச்சிராதிகள் மார்க்கத்திலுள்ள அடையாளக் கற்கள் போன்றவையா? ப்ரஹ்மத்தையடைய விரும்பிச் செல்பவர்களுக்கு உபசாரம் செய்து வழியில் அழைத்துச் செல்பவர்களா? என்று சம்சயம். உலகில் வழிநடப்பவனுக்கு ஓர் வழிகாட்டியானவன் தொலைவிலுள்ள ஒரு மரத்தைக் காட்டிப் பின் ஒருமலையைக் காட்டி கிராமஞ்செல்லும் வழியைக் கூறுவதுபோல் இங்கும் காண்கிறபடியால் மார்க்கத்திற்கு *அடையாளமானவர்* என்று பூர்வபக்ஷம். அதை நிரஸிக்கிறார். (ஸூ) ஆதிவாஹிகா: தல்லிங்காத்**

***ஆதிவாஹிகா:*** = வித்வான்களுக்குத் தத்தம் இடத்தில் உபசாரங்கள் செய்து வழி நடத்தும்படி பரமபுருஷனால் நியமிக்கப்பட்ட அக்னி முதலிய வற்றின் அபிமானி தேவதைகள் வித்வான்களை வழியிலே செலுத்துபவர்கள் ***தல்லிங்காத்*** = ப்ரஹ்மத்திடம் சேர்ப்பிப்பதற்கான அங்கங்கள் இருப்பதால் என்றபடி. ''தத்புருஷோமானவ ஸ்ஸ ஏனான் ப்ரஹ்ம கமயதி'' என்ற **வித்யுத்** புருஷன் ப்ரஹ்மத்திடம் ஜீவனைச் சேர்ப்பிப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதால் மற்ற அர்ச்சிராதி தேவதைகளுக்கும் ப்ரஹ்மத்திடம் சேர்ப்பித்தல் **என்ற** ஸம்பந்தமே தீர்மானிக்கப்படுகிறது. மேலும் அக்னிலோகம் என்றவிடத்தில் லோகசப்தமும், ப்ரஹ்மவித்திற்கு வழிநடுவே போகம் ஏதுமில்லாமையாலே கமயித்ருத்வம் சொன்னாலே பொருந்துவதாகும்.

## (ஸூ) வைத்யுதேநைவ ததஸ் தச்ச்ருதே:

*தத:* = அந்த வித்யுத்துக்கு மேலே *வைத்யுதேந* - வித்யுத் புருஷனோடு கூடவே, வித்வானுக்கு கமனம் ஏற்படுகிறதாம். *தச்ச்ருதே:* - ஸஏனாந் ப்ரஹ்ம கமயதி என்று வைத்யுதனுக்கே ப்ரஹ்மத்தைச் சேர்ப்பித்தல் சொல்லப்பட்டிருப் பதால் என்பதாம். இதனால், வருண, இந்த்ர, ப்ரஜாபதிகள் வைத்யுதனுக்கு (மின்னல் புருஷனுக்கு) ஸஹகாரிகள் (துணைவர்கள்) என்பதாம்.

இந்த அர்ச்சிராதிகள் அக்ன்யாதி தேவதைகளுக்கும் **அதிஷ்டாதாக்**களான நித்யஸூரிகள் என்று ஒருபக்ஷம். வைத்யுதன் மட்டும் **நித்யஸூரி** யென்றொரு பக்ஷமுண்டு என்பது ஸ்வாமி தேசிகனின் **திருவுள்ளம்.** இங்குள்ள ஓர் விசேஷம்:—

அர்ச்சிராதிமார்க்கத்தால் ஸூர்யப்ராப்தி போலவே - **தூமாதிமார்க்கத்**தாலே சந்த்ர ப்ராப்தி கூறப்படுகிறது இது கர்மபலனையனுபவிப் பதற்கானது ஆதலின், முன்கூறிய சந்த்ரப்ராப்தியைவிட **வேறானது.** அப்படியே புருஷ வித்யையில் ப்ரஹ்மவித்துக்களுக்கும் நக்ஷிணாயநமானத்தால் சந்த்ரனையடைதலாகிய பலன் கூறப்படுகிறது. இதுவும் **வேறுதான்.** இவ்வதிகரணத்தில் தக்ஷிணாயனத்திலும், உத்தராயணத்திலும் இறந்த ஸர்வ ப்ரஹ்மவித்துக்களுக்கும் ஸாதாரணமாக ஆதிவாக்ஹிரமத்தில் எட்டாவதாக

சந்த்ரப்ராப்தி கூறப்படுகிறது. இதுவும் முன் சொன்ன இருவகை சந்திர-ப்ராப்திகளுக்கும் வேறுபட்டதாய் அபவர்க்கம் செல்வோர்கள் அனைவருக்குமே பொதுவாயுள்ளது என்று நுண்ணறிவினோரால் அறியத்தக்கதென்று அதிகரண ஆசாராவளியில் அருளப்பட்டுள்ளது.

## கார்யாதிகரணம்

### (ஸூ) கார்யம் பாதரிரஸ்ய கத்யுபபத்தே:

இப்படி கீழ்ச்சொல்லிய அர்ச்சிராதி மார்க்கத்தால் ப்ராப்யமான ஸ்தான விசேஷத்தை நிஷ்கர்ஷிக்கிறார். என்று அதிகரண ஸங்கதி இந்த ஆதி-வாஹிகர்களின் கூட்டம் பரப்ரஹ்மத்தின் படைப்பான ஹிரண்யகர்ப்பனின் உபாஸகர்களைச் சேர்ப்பிக்கிறதா அல்லது பரப்ரஹ்மோபாஸகர்களையா? அல்லது ப்ரத்யகாத்மாவை (ஜீவனை) ப்ரஹ்மாத்மகமாயுபாஸிக்கும் பஞ்சாக்னி வித்யா நிஷ்டர்களையுமா, ஸ்வாத்மாவைச் சரீரமாகக்கொண்ட பரமாத்மாவை உபாஸிப்பவர்களான ஸத்வித்யா, தஹரவித்யா நிஷ்டர்களையும் சேர்ப்பிக்கிறதா என்று மூன்று வகையாக சம்சயம். இதில் கார்யமான ஹிரண்யகர்ப்ப உபாஸகர்களையே ஹிரண்யகர்ப்பலோகத்தில் சேர்ப்பிக்கிறது என்று முதல் பூர்வபக்ஷம். இவ்விஷயம் ஐந்து ஸூத்ரங்களால் விளக்கப்படுகிறது. (ஸூ) கார்யம் பாதரிரஸ்ய கத்யுபபத்தே:

*கார்யம்:-* ப்ரஹ்மத்தின் கார்யபூதனை சதுர்முகனை உபாஸிக்கும் புருஷனை அர்ச்சிராதிகணம் சேர்ப்பிக்கிறது என்பது பாதரி முனிவரின் மதம். ஏனெனில், ***அஸ்யகத்யுபபத்தே:-*** இந்த ஹிரண்ய கர்ப்ப உபாஸகனுக்கே கதி பொருத்தமாயிருப்பதால் என்றபடி. பரப்ரஹ்மோபாஸகனுக்கோவென்றால் இக்கதி பொருந்தாது. ஏனெனில், விபுவாயும் பூர்ணனையுமுள்ள பரப்ரஹ்மம் எங்கும் நிறைந்திருப்பதால் எப்போதும் அதையடைய ஓர் கதிவேண்டாம். பரப்ரஹ்மோபாஸனம் பின் எதற்கு எனில், அவித்யையின் நிவ்ருத்திக்கே-யானது, ப்ரஹ்மப்ராப்திக்கானதல்ல. என்ற இந்தபாதரியின்மதமே சங்கர மதத்திற்கு ஆதாரம்.

### (ஸூ) விசேஷிதத்வாத்ச

" தத்புருஷோமானவ: ஏனான் ப்ரஹ்ம கமயதி " என்றும், ப்ரஜாபதே: ஸபாம் வேச்மப்ரபத்யே என்றும், ச்ருதிகளால் ப்ராப்ய ஸ்தானம் சதுர்முக லோகம் என்று விசேஷமாகச் சொல்லப்பட்டிருப்பதால் ஹிரண்கர்ப்பனிடமே அவனுபாஸகர்களை ஆதிவாஹிகர்கள் சேர்ப்பிக்கிறார்கள் என்று கருத்து.

### (ஸூ) ஸாமீப்யாத்து தத்வ்யபதேச

ஸ ஏனான் ப்ரஹ்ம கமயதி என்று நபும்ஸக லிங்கமான ப்ரஹ்மசப்தம் பரப்ரஹ்மத்தைத்தானே காட்டும் - சதுர்முகனை எவ்வாறு குறிக்கும்

என்ற சங்கைக்கு இதில் விடைதருகிருர். ஹிரண்யகர்ப்பன் ப்ரஹ்மத்தின் ஸமீபத்திலிருப்பதால் நபும்ஸகலிங்கத்தால் குறிக்கப்பட்டதாகக் கொள்ள வேண்டும். "யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" என்று ப்ரஹ்மம் முதலில் படைத்தமையால் ஸமீபத்தினுள்ளதாகக் கொள்ளலாம். ஆக நபும்ஸகப்ரஹ்ம சப்தமும் சதுர்முகனைக் குறிக்கலாம் என்று அவர் கருத்து.

## (ஸூ) கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹாத: பரமபிதாநாத்

இப்படி ஹிரண்யகர்ப்பனின் ஸ்தானமே ப்ராப்யமானல், அது நசிக்கக் கூடியதாதலால், அமும் லோகம் நாவர்த்தந்தே என்று அபுநராவ்ருத்தியைச் சொல்லுகிற ச்ருதிக்கு உபபத்தி யாது என்னல் ***கார்யாத்யயே*** கார்யமான ஹிரண்யகர்ப்பலோகம் நசிக்கும்போது, ***ததத்யக்ஷேண*** அந்த லோகத்தின் தலைவருடன், ***அத:பரம்:—*** அவனைவிடச் சிறந்த ப்ரஹ்மத்தை யடைகிருன். *அபிதானுத்* தேப்ரஹ்மலோகேது பராந்தகாலே பராம்ருதாத்பரிமுச்யந்தி ஸர்வே. என்று பரமான அம்ருதத்வத்தை அடைந்து முக்தியையடைகிருன் என்பதாம்

## (ஸூ) ஸ்ம்ருதேச்ச

"ப்ரஹ்மணு ஸஹதேஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே ।
பரஸ்யாந்தே க்ருதாத்மான: ப்ரவிசந்தி பரம் பதம்" ॥

என்று பிரளயத்தின் முடிவில் சதுர்முகனின் ஆயுள் முடிந்ததும் அவருடன் சேர்ந்த அனைவரும் பரமபதத்தையடைகின்றனர் என்று ஸ்ம்ருதியாலும் தெளிவாகிறது. ப்ரதி ஸஞ்சரம்=ப்ரளயம், ப்ரஹ்மாவின் ஆயுள் முடிவில் என்பதாம் இதனைத்தும் பாதரிமஹர்ஷியின் மதம். இதனை நிரஸிக்கிருர்

## (ஸூ) பரம் ஜைமினிர் முக்யத்வாத்

பரப்ரஹ்மோபாஸகனையே ஆதிவாஹிகர் கூட்டம் சேர்ப்பிக்கின்ற-தென்று ஜைமினி முனிவரின் மதம் ***முக்யத்வாத்*** — ப்ரஹ்ம கமயதி என்னுமிடத்தல் ப்ரஹ்மசப்தம் பரப்ரஹ்மத்தையே முக்யவ்ருத்தியாகக் குறிக்குமாதலால், ப்ரஹ்மலோகம் என்ற சப்தமும் ப்ரஹ்மமாகிய லோகம் என்று பரப்ரஹ்மத்தையே சொல்வதாம். லோகான் என்ற பன்மையும்-அதிதி: *பாசான்* என்றவிடத்திலுள்ள பன்மைபோல கௌணமானதாம்.

## (ஸூ) தர்சனச்ச

"அஸ்மாத் சரீராதுத்தாய பரம்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேனரூபேண அபிநிஷ்பத்யதே" என்கிற ச்ருதி அர்ச்சிராதி மார்க்கத்தால் சென்ற வித்வானுக்குப் பரப்ரஹ்மப்ராப்தியைக் காட்டுகிறது.

## (ஸூ) நசகார்யே ப்ரத்யபிஸந்தி

ப்ரஜாபதே; = ஸபாம் வேச்ம ப்ரபத்யே என்றவிடத்தில் அர்ச்சிராதி மார்க்கத்தால் சென்றவித்வானுக்கு கார்யே = கார்யமான சதுர்முகலோகத்தில் நசப்ரத்யபிஸந்தி: = ஆர்வமில்லை. ஏனெனில் - தூத்வாசரீர மக்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகமபி ஸம்பவாநி என்று ப்ராப்யமான லோகம் நித்யம் என்று விசேஷிதமாகையாலென்பது கருத்து நித்யமான ப்ரஹ்மலோகத்தை க்ருதனை ஜீவாத்மா அடைவனென்று ச்ருதியின் பொருள். மேலும் - யசோ ஹம்பவாமி ப்ராஹ்மணானாம் என்று உபாஸகனுக்கு ஸர்வ அவித்தைகளின் விடுதலையுடன்: ஸர்வாத்ம பாவத்வா அனுஸந்தானம் தோன்றுவதால் அது ஹிரண்யகர்ப்ப உபாஸகனுக்குக்கூடாதாகையால், ப்ரஹ்மோபாஸகனையே அர்ச்சிராதிகளின் கூட்டம் சேர்ப்பிக்கிறதென்று ஜைமினியின் மதம்.

இப்போது பகவான் பாதராயணர் தன் மதத்தைக் கொண்டு ஸித்தாந்தத்தைக் கூறுகிறார்.

## (ஸூ) அப்ரதீகாலம்பலாந்நயதீதி பாதராயண: உபயதாசதோஷாத் தத்க்ரதுச்ச

காரியமான ஹிரண்யகர்பனையே உபாஸகர்களைச் சேர்ப்பிக்-கின்றனர் என்ற பக்ஷமும். பரப்ரஹ்மோபாஸகனையே சேர்ப்பிக்கின்றனர் என்ற நியமமும் கூடாது. ஏனெனில், **உபயதாஸ தோஷாத்**: இரண்டு பக்ஷங் களிலும் தோஷமுண்டு. கார்யப்ரஹ்மோபாஸகனையென்ற பக்ஷத்தில் "பரம் ஜ்யோதி ரூபஸம்பத்யஸ: என்பது போன்ற ச்ருதிகளும். "யேசேமே ரண்யே ச்ரத்தாதப இத்யுபாஸதே" பக்ஷத்தில் ததத்ய இத்தம் விது: என்று பஞ்சாக்னிவித்யாநிஷ்டன் விஷயமான ச்ருதிக்கு விரோதம் வரும். ஆகையால், இருபக்ஷங்களிலும் தோஷமுள்ளது. ஆகவே, அப்ரதீகாலம் பனர்களையே சேர்ப்பிக்கின்றனர் என்பது பகவத்பாதராயணர் திருவுள்ளம். ப்ரதீகம் என்பது விசிஷ்டமான பொருளில் ஏகதேசமான அங்கம். விசிஷ்ட ப்ரஹ்மத்தில் ஏகதேசமான சித்வஸ்துக்களையும் அசித் வஸ்துக்களையும் ப்ரஹ்மத்ருஷ்டியாலோ, ஸ்வரூபேனவோ உபாஸிக்கிறவர்கள் ப்ரதீகாலம்-பனர்கள். இவர்களை விட்டு வேறுபட்ட ஸர்வஜ்ஞ - ஸர்வகாரண ஸத்யஸங்கல்ப - நிகில ஹேய ப்ரத்யனீக கல்யாண குணை கதானமான ப்ரஹ்மத்தை உபாஸிப்பவர்களும் பூதஸூக்ஷ்மபரிஷ்வக்தனை ஜீவாத்மாவை ஸர்வத்ர இருப்பவனுயும். பூதஸூக்ஷ்மங்களின் வேறுபட்டவனுயும் ஜ்ஞானைக ஸ்வரூபனுயும், நிர்விகாரனுயும் யஆத்மனி நிஷ்டன் என்கிறபடியே ப்ரஹ்மாத்ம கனுயும் பஞ்சாக்னிவித்தையில் கூறிய ப்ரகாரமாக உபாஸிக்கிறவர்களும் ஆகிய இருவரும் அப்ரதீகாலம்பனர்கள். இவ்விருவரையும் ஆதிவாஹிகர் சேர்ப்பிக்கின்றனர். இவ்விஷயத்தில் தத்ய இத்தம் விது: என்று பஞ்சாக்னி

வித்யா நிஷ்டர்களையும் அனுவதித்து. யேசேமேऽரண்யே என ஸத்வித்யா நிஷ்டர்களையும் அனுவதித்து தேர்ச்சிஷம் அபிஸம்பவந்தி முதலியவற்றால் இந்த உபயவிதோபாஸகர்களுக்கும் அர்ச்சிராதிகதியுண்டென்பது ஒரே ச்ருதியாலே திடமாயிற்று என்பதாம் ; **தத்க்ரதுச்ச**-யதா க்ரது ரஸ்மின் லோகேபவதி ததேத: ப்ரேத்யபவதி. என்கிற தத்க்ரதுந்யாயத்தாலே பஞ்சாக்னி வித்யா நிஷ்டர்களான அசித்வியுக்த பரமாத்மாத்மக ஸ்வாத்மோபாஸகர்களும் ப்ரஹ்ம நிஷ்டர்களென்று சொல்லக்கூடும். ஏனெனில், பஞ்சாக்னிவித்யா நிஷ்டனுக்கும் ஸத்வித்யா நிஷ்டனுக்குப் போலே அர்ச்சிராதிகதியால் ப்ரஹ்மப்ராப்தியையும் அபுனராவ்ருத்தியையும் சொல்வதால் பரமாத்மாத்மகஸ்வாத்மோபாஸனம் ப்ரஹ்மோபாஸனமில்லையென்றால் இது கூடாதென்று கருத்து. பூமவித்யையில் சொன்ன நாமாதி ப்ராணன் வரையான ப்ரதீகோபாஸகர்களுக்கு முன் சொன்ன இருவித ச்ருதிகளின் படியான உபாஸனையுமில்லாமையாலே தத்க்ரது ந்யாயத்தால் அர்ச்சிராதிகதி மூலம் ப்ரஹ்மப்ராப்தியும் அபுநராவ்ருத்தியும் கிடையாதென்று தேறுகிறது.

## (ஸூ) விசேஷஞ்ச தர்சயதி

யாவத் நாம்நோகதம் தத்ராஸ்ய காமசாரோபவதி என்கிற பூமவித்யாந்தர்கத வாக்யம், கேவலாத்மாவையோ அசின்மிச்ராத்மாவையோ கேவலாசித்வஸ்துவையோ, ப்ரஹ்மத்ருஷ்டியாலோ ஸ்வரூபேணவோ உபாஸிக்கும் ப்ரதீகோபாஸகனுக்கு கதியை அபேக்ஷிக்காமலே அளவிட்ட பல (விசேஷ)த்தையும், காண்பிக்கிறது. ஆகையால், ப்ரஹ்மணாஸஹதே ஸர்வே என்னும் வசனமானது அர்ச்சிராதி மார்க்கத்தால் ப்ராப்யத்தையடைந்தவர்களின் கதிப்ரகாரத்தைச் சொல்லவரவில்லை. அவ்வழியே சென்றவர்களுக்கு மரணசமயத்தில் தாமாகவே ஸுக்ருத துஷ்க்ருதங்கள் நசித்துவிட்டமையால், ஹிரண்யகர்ப்ப லோகத்திற்குப் போவதற்கும் அங்குள்ள போகானுபவத்திற்கும் ஹேதுக்களான கர்மங்களில்லாமையாலே தத்க்ரது ந்யாய விரோதம் வருவதாலும், மத்தியில் விளம்பமின்றி, ப்ரஹ்மப்ராப்தி சொல்லும் ச்ருதி விரோதத்தாலும் என்று கருத்து. ப்ரஹ்மணாஸஹ என்கிற வசனம் புண்யகர்ம விசேஷத்தால் ஹிரண்ய கர்ப்ப லோகத்தையடைந்தவர்களாய் பாதராயணர் அருளியபடி ப்ரஹ்மலோகத்தில் வித்யாநிஷ்பத்தியேற்பட்டவருக்கான கதியைச்சொல்லுகிறது. மேலும், தேப்ரஹ்மலோகேது என்னும் ச்ருதியில் ப்ரஹ்மலோக சப்தத்துக்கு கர்மதாரய வ்ருத்தியால் பரமாத்மாவே அர்த்தமாவதால் உபாஸ்யமான ப்ரஹ்மத்திலிருக்கும் உபாஸகர்கள் என்று பொருள் ஏற்படுகிறது.

*பராந்தகாலே:* = சரமதேஹாவஸான காலத்தில், *பராம்ருதாத்* உபாஸன ப்ரீதனான பரமாத்மாவின் மூலமாக *பரிமுச்யந்தி ஸர்வே* = வேதாந்த

விஜ்ஞானத்தினல் பொருள் தெளிவேற்பட்டப்ரபந்தர்களும், பந்தத்திலிருந்து விடுபடுகிறுர்கள் என்பதாக ப்ரகரணத்தால் தோன்றுகிறது. தத்ய இத்தம் விது: என்கிற ச்ருதியிலே பஞ்சாக்னிவித்யா நிஷ்டர்களுக்கு ப்ரஹ்மப்ராப்தியும் திரும்பிவராத நிலேயும், கூறப்பட்டுள்ளமையால். தத்க்ரது ந்யாயத்தாலே அசித்வியுக்தமாயும், ப்ரஹ்மாத்மகமுமான ஆத்மஸ்வரூப உபாஸனம் கருதப்படுவதாம். அப்படியே அங்குள்ள ச்ருதியும், இதிது பஞ்சம்யாம் ஆஹுதௌ ஆப: புருஷ வசஸோ பவந்தி என்றும், ரமணீய சரணு: என்றும் இப்பகுதியில் பூதாந்தரங்களுடன் கலந்த அப்புக்களுக்கே கர்மமூலமாக மனுஷ்யாதித்தன்மை வரும் என்ற சிதசித் விவேகத்தைக் காட்டி, தத்ய இத்தம் விது: என்று பூதஸூக்ஷ்ம வியுக்தமாய் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்ட தன் ஆத்மாவின் உபாஸனத்தை விதிக்கிறது.

ஆகையால் முன்சொன்ன பொருளே பொருந்துவதாம் - இங்கு ஸ்ரீ தேசிகன் அருளியது :- ஸ்வாத்மப்ரகாரக பரமாத்ம விசேஷ்யக உபாஸன நிஷ்டனும், பரமாத்மப்ரகாரக ஸ்வாத்ம விசேஷ்யக உபாஸன நிஷ்டனும், பூர்ணப்ரஹ்ம உபாஸகர்களேயாம். ஆனுலும், இவர்களுடைய உபாஸனத்தில் விசேஷண விசேஷ்யபாவத்தில் மட்டும் வேறுபாடு உள்ளது இதனுல் எந்தக் குறையுமில்லே என்று கருத்து.

## இப்பாதத்தில் ஐந்ததிகரணங்களின் கருத்துச் சுருக்கம் வருமாறு :-

1. அர்ச்சிராத்யதிகரணத்தில், ப்ரஹ்மவித்யா ப்ரகரணங்களில் கூறிய அர்ச்சிராதிமார்க்கம் ஒன்றேயென்பதும்,
2. வாய்வதிகரணத்தில் அந்தரிக்ஷத்தில் அடங்கிய வாயுவே தேவ லோகம் என்று வழங்கப்படலும்,
3. வருணுதிகரணத்தில் வித்யுத்துக்குமேல் வருண இந்த்ர ப்ரஜாபதி களுக்கு நிவேசமும்,
4. ஆதிவாஹிகாதிகரணத்தில் அர்ச்சிஸ் முதல் வித்யுத் வரை உள்ளவர் பரமபதத்தைச் சேர்ப்பிப்பவரென்றும்,
5. கார்யாதிகரணத்தில் - ப்ரஹ்மவித்யாநிஷ்டர்களுக்கே அர்ச்சிராதி கதியென்றும் ஐந்தர்த்தங்களைக் கூறும் ஐந்ததிகரணங்கள்.

நான்காம் அத்தியாயம்

மூன்றும் பாதம் முற்றியது.

## நான்காம் அத்தியாயம் நான்காம் பாதம்

## ஸம்பத்யாவிர்ப்பாவாதிகரணம்

### (ஸூ) ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேநசப்தாத்

இப்படி இவ்வத்யாயத்தில் முதல் பாகத்தில் பாபத்தின் அச்லேஷ விநாசரூபமான ப்ரஹ்ம வித்யாபலத்தை நிரூபித்து இரண்டாம் பாதத்தில் ஸ்தூலதேஹ ஹானி ரூபமான வித்யாபலத்தையும். மூன்றாம் பாதத்தில்-அர்ச்சிராதிமார்க்கத்தால் ப்ரக்ருதி மண்டலத்தை அதிக்ரமித்து, விரஜையைத் தாண்டிய பிற்பாடு ஸூக்ஷ்ம தேஹத்யாக ரூபமான வித்யாஸத்தையும் நிரூபித்தார். இனி, நான்காம் பாதத்தில் ப்ரக்ருதி மண்டலத்தைக் கடந்த வித்வானுக்கு ஸ்ரீ வைகுண்டத்தில் ஆனந்தமய திவ்யரத்ன மண்டபத்திலே நித்யஸூரிகளின் குழாத்தில் பராங்குசாதி பூர்வாசார்யர் முன்னிலையில், திருவனந்தாழ்வான் எனும் பர்யங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரியப்பதியான ஸ்ரீமந் நாராயணனின் ஸாலோக்யம். ஸாருப்யம், ஸாயுஜ்யம் முதலியவற்றை அடைந்து பரிபூர்ண ப்ரஹ்மானுபவம் என்னும் ஆனந்த பரீவாஹமாகிய - ஸர்வதேச, கால, அவஸ்தைகளுக்கும் ஏற்ற எல்லாக் கைங்கர்யங்களையும் நிரூபிக்கிறார் என்று பாத ஸங்கதி.

"ஏவமேவைஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாயபரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேன ரூபேணாபிநிஷ்பத்யதே" என்ற வாக்யத்தில் பரம்ஜ்யோதிஸ்ஸையடைந்த ஜீவனுக்கு ஸ்வ ஸ்வரூப ஆவிர்பாவம் விளக்கப்படுகிறதா சாதிக்கப்படும் வேறு ரூபத்தோடு ஸம்பந்தம் விளக்கப்படுகிறதா என்று சம்சயம். ஸ்வரூபத்துக்கு ஸுஷுப்த்யாதிதசையில் ஆனந்தானுபவமில்லாமையாலும், ஸ்வரூபம் மட்டும் எப்போதும் ஆவிர்பூதமாகையாலும் ஸ்வர்க்காதிகளில்போல் சாத்யமாயும் ஸுகத்திற்கே உறைவிடமாயுமுள்ள தேகத்தோடு ஸம்பந்தம் விளக்கப்படுகிறது. அதனாலேயே அபிநிஷ்பத்யதே என்ற சப்தம் முக்கியார்த்தமுள்ளதாகும். என்பது பூர்வபக்ஷம் இதனை நிரஸிக்கிறார்.

### (ஸூ) ஸம்பத்யாவிர்ப்பாவ: ஸ்வேனசப்தாத்

ஸம்பத்ய — பரம்ஜ்யோதிஸையடைந்து ஸ்ரீ வைகுண்டத்தில் ஆனந்தமய திவ்யரத்தின மண்டபத்தில் திருவனந்தாழ்வானுகிற திவ்யபர்யங்கத்தின் நடுவே யெழுந்தருளியிருக்கும் பரமபுருஷனை ஸ்ரீதேவியுடன் நெருங்கி ஆவிர்ப்பாவ: அபஹத பாப்மத்வாதி குணவிசிஷ்டமான ஜீவன் ஸ்வஸ்வரூபத்துக்கு கர்ம க்ருத தேஹ ஸம்பந்த மூலமாக திரோதான மற்று, சுருக்க மற்ற, ஜ்ஞான குணகளுய்தோன்றுவரெனனச்ருதியால் ப்ரதிபாதிக்கப்படுமே தவிர

சாத்யமான தேஹத்தின் ஸம்பந்தமன்று. ஏனெனில், ஸ்வேநசப்தாத்-ஸ்வேன ரூபேண அபிநிஷ்பத்யதே என்னுமிடத்தில் 'ஸ்வேன' என்னும் விசேஷணவாசகசப்தம் இருப்பதால் என்றபடி. இதனால் இங்கு ஸாத்யமாக ரூபஸம்பந்தம் கருதப்பட்டதால் அந்த ரூபமும் தனக்கு அஸாதாரண மாகையால் ஸ்வேன என்று விசேஷிப்பதால் பரனில்லையென்ற நிலை ஏற்படும் என்பது கருத்து. ஆத்மாவுக்கு ஸ்வபாவ ஸித்தமான ரூபமே ஸ்வசப்தார்த்தம் என்பது கருத்து. இவ்வர்த்தத்தை மேல் இரு சூத்ரங்களும் விளக்குவன.

ஆமாம், ஸ்வ ஸ்வரூபம் மட்டும் 'அஹம் ஜாநாமி' என நித்தியமாய் ஆவிர்ப்பூதமாகையால் பரம்ஜ்யோதிஸ்ஸையடைந்தபிறகு ஸ்வ ஸ்வரூப ப்ராப்தி என்றது பொருந்தாது என்று சங்கித்து பரிஹரிக்கிறார்.

## (ஸூ) முக்த: ப்ரதிஜ்ஞாநாத்

*முக்த:* கர்மஸம்பந்தத்தாலான தேஹத்திலிருந்து விடுபட்ட ஜீவனே. ஸ்வேனரூபேண அபிநிஷ்பத்யதே என்று சொல்லப்படுகிறான், தேஹியான ஸம்ஸாரி ஜீவனல்லன். *ப்ரதிஜ்ஞாநாத்* - ஏதம்த்வேவ தேபூயோனு வ்யாக்யாஸ்யாமி என்று கர்மஸம்பந்தத்தாலான தேஹஸம்பந்த க்ருதமான ஜாக்ரதாதி தசைகளிலிருந்தும், விடுபட்ட ஸ்வரூபமுள்ள ஜீவனே இங்கு பேசவேண்டியவனாக ப்ரதிஜ்ஞை செய்தபடியால் என்றவாறு. இங்கு அவன் ஜீவஸ்வரூபம் நித்யப்ராப்தமானாலும் கர்மமெனும் அவித்யையால் மறைக்கப் பட்டவனுக்கு மறைவின் நீக்கம்தானே அபிநிஷ்பத்தியெனப்படுகிறது என்பதாம்.

இப்படி ஸ்வரூபாவிர்பாவத்திலும் "யுக்தியால் இவ்வர்த்தம் அபிநிஷ்-பன்னமாகிறது" (அபிநிஷ்பத்யதே) என்னுமிடத்தில்போல், அபிநிஷ்பத்தி யென்ற சொல்லின் ப்ரயோகத்தினைக் காணலாம். ஆனாலும், ஸ்வரூப மாத்ரா-விர்ப்பாவத்துக்கு புருஷார்த்தத்வம் எப்படிக்கூடுமென்பதற்கு விடையருளுகிறார்.

## (ஸூ) ஆத்மா ப்ரகரணாத்

தேஹாதிகளை விட்ட ஸ்வரூபத்தோடுள்ள ஆத்மா ஸ்வரூபத்தால் அபஹதபாப்மத்வாதிகளான எட்டு குணங்களுள்ளவனாக ப்ரஜாபதி வாக்-யத்தால் சொல்லப்படுகிறான். அத்தகைய ஆத்மாவுக்கே இந்த வாக்யத்தில் ஆவிர்பாவம் கூறப்படுகிறது. *ப்ரகரணாத்* - யஆத்மா அபஹதபாப்மா எனத் தொடங்கி ஏதம்த்வேவ தே பூயோனுவ்யாக்யாஸ்யாமி என முன்கூறிய எட்டு குணங்கொண்ட ஆத்மாவை ஏதம் என்று சொல்லும் ப்ரகரணத்தால் என்றபடி. ஆகையால், தானே குணாஷ்டகம் உடையவனானாலும் கர்மமெனும் அவித்யை யால் மூடப்பட்ட ஸ்வரூபத்தைக் கொண்டவனாகையால் பரஞ்சோதியை-

படைந்தே மறைவு நீங்கப் பெறுகிறன். அதையே ஆவிர்பாவம் என்று இங்கு சொல்கிறதென்றவாறு.

## இங்குள்ள விசேஷம்

ஸித்தாந்தத்தில் அபஹத பாப்மத்வாதி குணங்கள் எட்டோடு கூடிய ஸ்வரூபாவிர்பாவம் தான் உபாஸனத்தால் ஸாத்யையான முக்தியென சொல்லப்படுகிறது. அந்த ஸ்வரூபம் அஹம், அஹம் என்று எப்போதும் ஸித்தமாகையால், அதற்கு ஸாத்யத்வம் எப்படிக் கூடும் என்றால் ஸித்தம் ஸாத்யானுவேதாத் என்கிறபடியே நித்யஸித்தமான முன் சொன்ன ஆத்ம ஸ்வரூபத்திற்கு வித்யாஸாத்யமாயும், கர்மஸம்பந்தத்தாலான ஜ்ஞானத்திற்கு சுருக்கமென்னும் அசுத்தம் விலகுவதுடன் ஜ்ஞான மலர்ச்சி என்னும் தூய்மை ஏற்படுவதால் இந்தவேறு தர்மத்தின் ஸம்பந்தத்தையிட்டு ஸித்த ஸ்வரூபமே ஸாத்யமான முக்தியென்னலாம். எப்படி ஸித்தமான வ்ரீஹி முதலியவை ப்ரோக்ஷணத்தால் ஏற்படும் சுத்தியால் ஸாத்யமாகின்றனவோ, அசுத்தனை மனிதன் ஸ்னானத்தால் ஏற்படும் சுத்தியினால் ஸாத்யனாகிறானோ அப்படியிதுவும் கூடலாமென்பது கருத்து.

ஆயினும், அபிநிஷ்பத்திசப்தத்திற்கு அர்த்தம்யாதெனில், உலகில் ஒரு பொருள் முதலில் அனுகூலமாகவும், பின் அனுபவத்தால் மிகவும் அனுகூலமாகவும் மாறுவதுபோல ஸுகஸ்வரூபனான ஆத்மாமுக்தி தசையில் மிக்க அனுகூலமாகத் தோன்றுகிறான் என்பது.

மேலும், அபிவ்யக்தி சப்தம் புதிதாகவரும் தர்மத்தைக் குறிப்பது என்றால். அபாவம் என்பது பாவாந்தரஸ்வரூபம் ஆதலின், ஜ்ஞானச் சுருக்கம் நீங்குதலாகிய ஜ்ஞானத்தின் மலர்ச்சியே அபிவ்யக்தியாகும் அப்போது தடையற்ற ஸ்வரூபத்தைச் சார்ந்த மலர்ச்சி (விகாஸம்) ஸ்வரூபமே ‘ஸ்வேன’ என்ற சப்தத்தின் பொருள். இப்படி தர்மபூதஜ்ஞானத்திலுள்ள சுருக்கம் நீங்குவதான மலர்ச்சியையிட்டு தர்மிஸ்வரூபத்தைச் சொல்வதில் குறையில்லை. இதன் பின் ஜ்ஞானச்சுருக்கம் ஏற்படக்காரணமில்லாமையால் அந்த மலர்ச்சி (விகாசம்) நித்யம் என்று கருத்து.

## அவிபாகாதிகரணம்

### (ஸூ) அவிபாகேன த்ருஷ்டத்வாத்

முக்திதசையில் எல்லாபந்தங்களிலிருந்தும் விடுபட்ட ஜீவன் தன்னைப் பரமாத்மாவிடமிருந்து வேறுபட்டவனாக அனுபவிக்கிறானா (அஹம் ப்ரஹ்மாஸ்மி என்று) என்று சம்சயம். இதுவே ஸங்கதியும்.

நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதி என்றும் "மமஸாதர்ம்யமாகதா:" எனவும் ச்ருதி, ஸ்ம்ருதிகள் ஜீவனையும், பரமாத்மாவையும் பிரித்துச் சொல்வதால் முக்தன் தன்னை ப்ரஹ்மத்தைவிட்டுப்பிரிந்ததாகவேயனுபவிக்கிறான் என்று பூர்வபக்ஷம். இதை நிரஸிக்கிறார்.

## (ஸூ) அவிபாகேந த்ருஷ்டத்வாத்

*அவிபாகேந*=முக்தன் தன் ஆத்மாவுக்கும், ஆத்மாவாய் ஸர்வாந்தர்யாமியாயுள்ள பரமாத்மாவை அஹம்ப்ரமாஸ்மி என்று தன்னோடு இரண்டறச் சேர்த்தே யனுபவிக்கிறான். *த்ருஷ்டத்வாத்:* "ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்திச" என்ற நியாயப்படி உபாஸனதசையில் உள்ளதுள்ளவாறு பரமாத்மாவை ஆத்மாவாகக் கொண்ட ஸ்வாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதால் என்றபடி, ஆகவே உபாஸனம் செய்தபடி பலன் ஆகையால், பலதசையிலும், முக்தன் அஹம்ப்ரஹ்மாஸ்மி என்று அனுபவிக்கக் குறையில்லை. தத்த்வமஸி, அயமாத்மா ப்ரஹ்ம என்று ஜீவனுடன் ஸாமாநாதிகரண்யமும் (விசேஷண விசேஷ்யபாவம்) ய ஆத்மனிதிஷ்டன், யஸ்யாத்மா சரீரம் என்று சொல்லப் பட்ட சரீராத்ம பாவத்தையடிப்படையாகக் கொண்டது - ஆதலின், ப்ரஹ்ம சரீரமான ஜீவவாசக சப்தங்களும், ப்ரஹ்மம் வரை குறிப்பிடுவனவாதலின், 'அஹம் ப்ரஹ்ம' என்ற அனுபவத்திற்கும் அஹம் ப்ரஹ்மாத்மகன் என்றே கருத்து. இங்கு ஸ்வரூபத்தால் இருவருக்கும் ஐக்கியம் பொருளல்ல: ஸாதர்ம்யம் சொல்லும் ச்ருதியும் பரமாத்ம சரீரனான ஜீவனுக்கே எட்டு குணங்களால் பரமாத்மாவுடன் ஸாம்யத்தைச் சொல்கிறது. "ஸோச்னுதே ஸர்வான் காமான்த் ஸஹப்ரஹ்மணா விபச்சிதா" முதலிய ச்ருதிகளும் முக்தன் ப்ரஹ்மத்தின் சரீரமாதலின், அவனுக்கு ப்ரகாரபூதனாயிருந்தே ஸ்வாத்மாவான பரமாத்மாவை ஸகல கல்யாண குணவிசிஷ்டனாக அனுபவிக்கிறான் என்று அர்த்தத்தைச் சொல்லுகிறது.

## ப்ராஹ்மாதிகரணம்

## (ஸூ) ப்ராஹ்மேண ஜைமினி ருபன்யாஸாதிப்ய:

ப்ரத்யகாத்மாவுக்குப் பரஞ்ஜ்யோதியையடைந்தபின் அவித்தையெனும் மறைவு நீங்கிவிடுவதால், ஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்கிறதென்று கூறப்பட்டது. எந்த ஸ்வரூபத்துடன் ஆவிர்ப்பவிக்கிறானென்பது இருவகை ச்ருதிகளால் இருவகையாக விளக்கப்படுகிறது என ஸங்கதி. இந்த ஜீவனின் ஸ்வரூபம் அபஹதபாப்மத்வாதி குணங்கள் எட்டுடன் கூடிய, சைதன்யமாத்ரமா அல்லது இவ்விரண்டும் ஸ்வபாவஸித்தமா என்று சம்சயம். அபஹதபாப்மத்வாதி குணவிசிஷ்டம் என்ற பக்ஷத்தை முதலில் காட்டுகிறார்.

## (ஸூ) ப்ராஹ்மேண ஜைமினிருபன்யாஸாதிப்ய:

***ப்ராஹ்மேண*** = தஹரவித்யையில் ப்ரஹ்மத்துக்குக்கூறிய அபஹத பாப்மத்வாதி குணங்களுக்குச் சமமான குணங்களுடன் முக்தஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்கிறதென்று ஜைமினி கருதுகிறார். ஏனெனில். *உபந்யா* ***ஸாதீப்ய:*** = ப்ரஜாபதி வாக்யத்தில் ஜீவனுக்கும் இந்த குணங்கள் உபன்யஸிக்கப்படுவதால் என்றபடி ஆதிபதத்தால் ''ஜக்ஷந்க்ரீடன் ரமமாண:'' என்பது போன்ற ச்ருதிகளாலும் முக்தனுக்கு ஸத்ய ஸங்கல்பத்வம் முதலியவை தோன்றுகின்றன என்று கருத்து. இரண்டாவது பக்ஷத்தை உபந்யஸிக்கிறார்.

## (ஸூ) சிதி தன்மாத்ரேண ததாத்மகத்வாதித்யௌடுலோமி:

***சிதி தன் மாத்ரேண*** = ஜீவனுக்கு சைதன்யமாத்ரமே (ஜ்ஞானமே) ஸ்வரூபம் ஆதலின், அந்த ரூபத்துடனேயே ஆவிர்ப்பவிக்கிறன் என்று ஔடுலோமியின் மதம். ஏனெனில், *ததாத்மகத்வாத்*: விஜ்ஞான கன ***ஏவ*** என்று ஏவ காரத்தால் விஜ்ஞான ஸ்வரூபத்வம் தவிர வேறு குணங்கள் தடுக்கப்பட்டிருப்பதால் என்பதாம். இவ்விருமதங்களையும் நிரஸித்து ஸ்வமதத்தை சாதிக்கிறார்.

## (ஸூ) ஏவமப்யுபன்யாஸாத் பூர்வபாவாதவிரோதம் பாதராயண:

***ஏவமபி*** = ஆத்மா சித் ஸ்வரூபனேயானாலும், ப்ரஜாபதி வாக்யத்தில் அபஹதபாப்மத்வாதி குணங்களை உபன்யஸித்திருப்பதால், *பூர்வபாவாத்* = முன் கூறிய எட்டு குணங்களும் உள்ளவையென்று தோன்றுவதால் - இரண்டு ஸ்வரூபங்களுக்கும் ***அவிரோதம்*** *பாதராயண:* = விரோதமில்லையென்று பாதராயணர் கருதுகிறார்: விஜ்ஞானகனஏவ - என்றதில் ஏவகாரம் வேறு ச்ருதிகளிலுள்ள குணங்களைத்தடுக்காது. ஸைந்தவ: ரஸகனஏவ என்றதில் ஏவகாரம் ரஸம்தவிர லவணமென்னும் பொருளையும், அதிலுள்ள ஸ்பர்சம் போன்ற குணங்களையும் தடுப்பதில்லையே. அதுபோல், இங்கும் விரோதமில்லையென்று திருவுள்ளம். ஆனல் ஏவகாரத்துக்குக் கருத்து யாதெனில், மாம்பழத்தில் ஒருபுறம் இனிப்பும், மறுபுறம் புளிப்பும் உள்ளதுபோல் - உப்புக்கட்டியில் வேறு சுவையில்லாமையால் வேறு பகுதியில் பிற சுவையில்லையென்ற பொருள் தருவதுபோல் ஆத்மஸ்வரூபம் முழுவதும் ஸ்வயம் ப்ரகாசமாதலின், ஜடம்போலின்றி ஜ்ஞானமே வடிவானது என்று அயோகவ்யவச்சேதம் ஏவகாரத்தின் பொருள். ஆகவே. இருச்ருதிகளுக்கும் விரோதம் வாராமைக்காக இருஸ்வரூபமும் உண்டென்று ஒப்புக்கொண்டு முக்திதசையில் இவ்விரு ரூபங்களுடனே ஆவிர்பவிக்கிறரென்று ஏற்கவேண்டுமென்கிறார்.

## ஸங்கல்பாதிகரணம்

### (ஸூ) ஸங்கல்பாதேவதத்ச்ருதே:

முக்தன் பரப்ரஹ்மத்தையடைந்து ஜ்ஞானஸ்வரூபனுயும் அபஹத பாப்மத்வாதி குணுஷ்டகமுடையவனுயும் ஆவிர்பவிக்கிருன் என்று கூறப்பட்டது. இப்போது அந்த முக்தனைக் குறித்துச் சொல்லப்பட்ட ஸத்யஸங்கல்பத்வம், ப்ரயத்னமெதையும் எதிர்பாராதபடி செயலாற்றல் என்று ஸ்தாபிக்கப்படுகிற-தென்று ஸங்கதி. பாம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணுபிநிஷ்பத்யதே ஸஉத்தம: புருஷ:- ஸதத்ர பர்யேதி ஜக்ஷத்க்ரீடன் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யானைர்வா ஜ்ஞாதிபிர்வா ஸயதி பித்ருலோக காமோ பவதி ஸங்கல்பா - தேவாஸ்ய பிதாஸ் ஸமுத்திஷ்டந்தி என்று முக்தனுக்கு விரும்பும் ஜ்ஞாதிகள் போன்ரூர் எதிர்வரக்கிடைப்பது இவனது வெறும் சங்கல்பத்தாலா - அன்றி வேறுப்ரயத்னத்தையபேக்ஷிக்கும் ஸங்கல்பத்தாலா என்று சம்சயம். உலகில் ப்ரயத்னுந்தரத்தை எதிர்பார்த்தே கார்யம் நிறைவேறுவதைக் காண்கிருேம். அதுபோல் இங்கும் சிறிது முயற்சியை எதிர்பார்த்தே ஸங்கல்பத்தால் கார்ய-ஸித்தி என்றும்' ஸங்கல்பாதேவ என்ற ஏவகாரத்திற்கு விஜ்ஞானகன ஏவ என்ற இடத்தில் போல வேறுகதி கல்பிக்கவேண்டும் என்றும் பூர்வபக்ஷம். அதனை நிரஸிக்கிருர். (ஸூ) ஸங்கல்பாதேவ தத் ச்ருதே:

முக்தனுக்குத் தன் ஸங்கல்பத்தாலேயே அனைத்தும் நிறைவேறுகின்றன. *தத் - ச்ருதே:* — ஸங்ல்பத்தாலேயே இவன் பித்ரு தேவதைகள் எதிரில் வந்து விடுகின்றனர் என்று ச்ருதி கூறுவதால்; ஸங்கல்பாதேவ - என்ற ஏவகாரம் 'விஜ்ஞானகனஏவ' என்ற ஏவகாரம்போல சுருக்கத்தைப் பொறுக்காது ஏனெனில், ய ஆத்மா அபஹத பாப்மா என்று வேறு ச்ருதியால் கிடைக்கும் ஜ்ஞான குணகத்வத்தை நிஷேதிப்பதில் அதற்கு ஸாமர்த்யமின்மையால். அந்தகுணத்தைவிட்டு ஜடத்வம் போன்ற தன்மையையே விலக்குவதாகும். ப்ரக்ருதத்தில் ஸத்யகாமத்வாதிகளின் உபந்யாஸத்தில்போல், வேறு எதையும் அபேக்ஷித்து நிற்கும் ஸத்ய காமத்வாதிகளிலும் ப்ரமாணம் இல்லாமையால் ஸங்கல்பாதேவ என்ற ஏவகாரம் வேறெதையும் அபேக்ஷிப்பதை விலக்குகிறது உலகத்திலும் அரசர் போன்றவர்கட்கு ஸத்ய ஸங்கல்பமில்லாமையால் அவர்களின் ஸங்கல்பத்திற்குத் தடையும் பிறரை எதிர்பார்ப்பதும் உண்டு. பரமபுருஷனே ஸத்ய ஸங்கல்பனுகையாலே அவன் அருளால் பரமஸாம்யத்தை யடைந்த முக்தனுக்கும் ஸத்யஸங்கல்பத்வம் கூடும். மற்றவர்கட்கு அவ்வாறு கூடாது.

### (ஸூ) அதஏவசாநந்யாதிபதி:

*அதஏவச* — அபஹதபாப்மா இத்யாதிச்ருதியாலேயே, *அநந்யாதிபதி:* — பகவானைத் தவிர்த்து வேறு கர்மா முதலியவற்றைத் தம் ஆதிபதியாகக்

கொண்டவனல்லன். இத்தால், அகர்மவச்யன் என்று தேறிற்று. இதற்கு-அபஹத பாப்மா - ஸத்யஸங்கல்ப: என்ற ச்ருதியே ப்ரமாணம். இங்கு 'பித்ரு லோக காமோபவதி' என்ற ச்ருதியில் சொன்னபித்ராதிகளின் போகம், தன் ஸங்கல்பத்தாலோ பகவத் ஸங்கல்பத்தாலோ ச்ருஷ்டிக்கப்பட்ட பரமபுருஷ போகத்தில் உள்ளடங்கிய பித்ராதிபோகமாகையால் போகவிபூதியின் அனுபவ-விசேஷரூபமேதவிர, லீலாவிபூதியிலுள்ள பித்ராதிகளின். போகரூபமல்ல என்பது கருத்தாம்.

## அபாவாதிகரணம்

### (ஸூ) அபாவம் பாதரி ராஹஹ்யேவம்:

முக்தனுக்குத் தேஹேந்த்ரியாதிகள் உண்டா? இல்லையா என்று சம்சயம் வந்தால், விருப்பப்படி சரீரமெடுத்துக்கொள்ளலாமென்றிங்கு சாதிக்கிருரென்று ஸங்கதி. முக்தனுக்கு சரீரம், இந்த்ரியங்கள் முதலியன உண்டா? இல்லையா? ஸங்கல்பத்திற்கேற்ப அவை அநியதங்களா? என்று சம்சயம்.

சரீராதிகள் இல்லையைன்பது முதல் பக்ஷம். உண்டென்பது இரண்டாவது பக்ஷம். அநியதமென்பது மூன்ருவது; முதலில் முதல் பக்ஷம். (ஸூ) அபாவம் பாதரி ராஹஹ்யேவம்:

முக்தனுக்கு சரீரமில்லையென்று பாதரி முனிவர் சொல்கிருர். ஆஹஹி ஏவம்: = நஹவை ஸசரீரஸ்ய ரத: ப்ரியா ப்ரியயோ பஹதிரஸ்தி. அசரீரம் வா வ ஸந்தம் நப்ரியாப்ரியே ஸ்ப்ருசத: என்னும் ச்ருதி, முக்தனுக்கு சரீரமில்லையென்றே சொல்கிறது என்ருர். அடுத்து சரீரமுண்டென்ற பக்ஷம் காட்டப்படுகிறது.

### (ஸூ) பாவம்ஜைமினிர் விகல்பாமனனுத்

முக்தனுக்கு சரீராதிகள் உண்டென்பதை ஜைமினி கூறுகிருர் ஏனென்ருல், விகல்பாமநநாத் = விவித: கல்ப: விகல்ப: பலவகையாக கூறப் படுவதால் என்கிருர். ஒரே ரூபத்துடன் பிணைக்கமுடியாத முக்த ஸ்வரூபத்தை ஸ ஏகதாபவதி த்விதாபவதி - த்ரிதாபவதி என்று பல ரூபங்கள் எடுத்துக் கொள்ளலாமென்று ச்ருதி கூறுவதால். இதனுல் பல பல தேஹங்களுமுண்டு என்று ஏற்படுவதால், தேஹேந்திரியாதிகள் முக்தனுக்கு நியதங்கள் என்பது ஜைமினியின்மதம்.

இனி தன் சித்தாந்தத்தைக் காட்டுகிருர்.

### (ஸூ) த்வாதசாஹவத் உபயவிதம் பாதராயணோSத:

அத:—இருவித ச்ருதிகளுமிருப்பதால் - மனதிலேயே அந்த லோகத்தில் எல்லாக்காமங்களையும் கண்டு மகிழ்கிருன் என்று ஒருச்ருதி. மற்றெருச்ருதி

ஒன்றோ-இரண்டோ மூன்றோ சரீரங்களையெடுத்துக்கொள்வான் என்று பகவான் பாதராயணர் இச்சுருதிகளால் முக்தனை அசரீரனாகவும், ஸசரீரனாகவும் கூறுகிறார். அதற்கு ஓர் உதாஹரணம் காட்டுகிறார் த்வாதசாஹவத்: ஒரே த்வாதசாஹயாகம் (12 நாட்களில் செய்வது) பலர்சேர்ந்து செய்கையில் ஸத்ரம் என்றும், ஒரேயஜமானன் புத்ரனைவிரும்பிச் செய்யும்போது அஹீனம் என்றும் பெயர் பெறுவதுபோல், ஸங்கல்பத்திற்கேற்ப ஸசரீரத்வமும், அசரீரத்வமும் இரண்டும் பொருந்துமென்கிறார்.

உபைதி என்ற வினைச்சொல்லால் விதிக்கப்படுவது ஸத்ரம் என்றும், யஜதி என்ற வினைச்சொல்லால் விதிக்கப்படுவது அஹீனம் என்றும் வேறுபாடு கூறுவதுமுண்டு.

முக்தனுக்குச் சொன்ன சரீராதி ஸித்தியும் அவன் சங்கல்பத்தால் மட்டும் ஏற்படுவதல்ல என்று காட்டுகிறார்.

## (ஸூ) தன்வபாவே ஸந்த்யவது பபத்தே:

தன்னால் படைக்கப்பட்ட சரீராதிகள் இல்லாவிட்டாலும் பரமபுருஷனால் படைக்கப்பட்ட சரீரத்தால் பொருத்தமேற்படுவதால் போகம் உசிதமானதே. ஆகவே, முக்தன் ஸத்ய ஸங்கல்பனானாலும் தான் தேஹாதிகளை ஸ்ருஷ்டிப்பதில்லை. எவ்வாறெனில், ஸந்த்யவத்=ஸ்வப்னத்தில்போல: ஸ்வப்னத்தில் பரமபுருஷன் படைக்கும் ரதம் முதலிய உபகரணங்களைக்கொண்டு ஜீவன் இன்ப துன்பங்களை அனுபவிப்பதுபோல - முக்தனும் லீலையில் ஈடுபட்ட பரம புருஷனால் ச்ருஷ்டிக்கப்பட்ட பித்ருலோகாதிகளாலே லீலாரஸத்தை யனுபவிக்கிறான்.

## (ஸூ) பாவே ஜாக்ரத்வத்

பாவே=தன் சங்கல்பத்தால் படைக்கப்பட்ட அனைத்தும் இருக்குமாகில், ஜாக்ரத்வத்=விழித்திருக்கும் அரசர்போன்றோர், தம் ஸங்கல்பத்தால் தேடிய ஐச்வர்யத்தால் போகத்தையனுபவிப்பதுபோல், முக்தனும் தன் ஸங்கல்பத்தால் கிடைத்த பித்ருலோகம் முதலியவற்றைக்கொண்டு போகத்தையனுபவிக்கிறான். போகமானது லீலாரஸம். பரமபுருஷனும் தன் லீலைக்காக தசரத வஸுதேவாதிகளைப் படைத்து தானும் மனிதனாய் அவதரித்து, லீலாரஸத்தை அனுபவித்தது போலவே முக்தர்களுக்கும், தன்லீலை ஸித்திக்கவே பித்ருலோகாதிகளை ச்ருஷ்டித்து அனுபவிக்கச்செய்கிறான். ஒரு சமயம் முக்தனும், ஸத்ய ஸங்கல்பனாக ஸ்வபித்ரு லோகாதிகளைத்தானே ஸ்ருஷ்டித்து மகிழ்கிறான். இதனால் ப்ரஹ்மானுபவவைகதானத்வம் கெடாது என்பதாம், முக்தனுக்கு சரீரவத்த்வம் தோன்றுவதால் ஸசரீரன் என்று கூறும் ச்ருதி கர்மக்ருத சரீரமில்லையென்ற கருத்துடையதாகும் என்று கருத்து.

ஆமாம்; ஆத்மா அணு என்று கூறப்பட்டது. அப்படியானால் ஒரே ஆத்மாவுக்குப் பல சரீரங்களில் ஆத்மாவாய் ஒரே காலத்தில் இருப்பு எப்படிப் பொருந்தும்? அவற்றில் ஆத்மாபிமானம் எப்படிப் பொருந்தும் என்ற சங்கைக்கு உத்தரம் அருளுகிறார்.

## (ஸூ) ப்ரதீபவதாவேச: ததாஹிதர்சயதி

ஒரு பக்கத்திலிருக்கும் விளக்கானது தன் ஒளியின் மூலம் பல இடங்களில் பரவுதல் போல ஒரே தேஹத்திலுள்ள அணுவான ஆத்மாவிற்கும் தன் ஒளிபோன்ற தர்மபூதஜ்ஞானத்தாலே ஸர்வ தேகங்களிலும் தன்ஸங்கல்பப் படி, தான் என்ற அபிமானத்திற்கேற்ற பரவுதல் (வ்யாப்தி) கூடலாம். ஒரு தேஹத்தில் ஹ்ருதயப்ரதேசத்திலுள்ள அணுவான ஜீவாத்மாவுக்கு கைகால்களில் தர்ம பூத * ஜ்ஞான வ்யாப்தியால் ஆத்மானுகுணவ்யாப்தி கூடுகிறுப் போல் தேஹாந்தரத்துக்கும் கூடலாமென்று கருத்து.

ததாஹிதர்சயதி—இவ்வாறே ச்ருதி காண்பிக்கிறது,

வாலாக்ர சதபாகஸ்ய சததாகல்பிதஸ்யச ।
பாகோ ஜீவஸ் ஸவிஜ்ஞேய: ஸசாநந்த்யாயகல்பதே ॥

என்று அணுவான முக்தனுக்கு தர்மபூதஜ்ஞானத்தில் வ்யாப்தியாலே ஆனந்த்யம் காணப்பட்டமையால், முன் சொன்ன அர்த்தம் தேறிற்று. நாணு ரதச்ருதே: என்ற சூத்ரத்தில் பரப்ரஹ்மத்திற்கே மஹத்வம் சொல்லுகையால் ப்ரத்யகாத்மாவுக்கு அணுத்வமே ஸ்வரூபம் என்று ஸூத்ரகாரர் திருவுள்ளம்.

ஆமாம்; ப்ராஜ்ஞேநாத்மனு ஸம்பரிஷ்வக்த: நபாஹ்யம் கிஞ்சனவேத நாந்தரம் என்கிற ச்ருதி பரப்ரஹ்மத்தையடைந்தவர்க்கு உள்-வெளி ஜ்ஞானமெல்லாம் அற்றுப்போவதாய்ச் சொல்வதால் அவனுக்கு ஜ்ஞானத்தின் ஆனந்த்யம் எவ்வாறு கூறலாம் என்ற சங்கைக்கு உத்தரமருளுகிறார்.

## (ஸூ) ஸ்வாப்யய ஸம்பத்யோ ரன்யதராபேக்ஷமாவிஷ்க்ருதம்ஹி

ப்ராஜ்ஞேநாத்மநா என்றச்ருதிவாக்யம் முக்தன் பற்றியதன்று. *ஸ்வாப்யயஸம்பத்யோரன்யதராபேக்ஷம்* — ஸுஷுப்தி மரணங்களுக்குள் ஒன்றைப்பற்றியதே. *ஆவிஷ்க்ருதம்* ஹி—ஸுஷுப்தி மரண தசைகளில் அஜ்ஞானமும், மோக்ஷதசையில் ஸர்வஜ்ஞத்வமும், ச்ருதிகளில் விளக்கப்பட்டவை-தானே. நாஹ *கல்வய மாத்மானம்* விஜாநாதி அயமஹமஸ்மீதி நோ ஏவேமாநி பூதாநி விநாசமேவாபீதோபவதி என்றச்ருதி ஸுஷுப்தியில் ஜ்ஞானமில்லையென்கிறது. இதில், ஸுஷுப்தஜீவன் தன்னையுணர்வதில்லை.

மற்ற பதார்த்தங்களையும் அறிவதில்லை விநாசத்தை அதர்சனத்தை யடைகிறன் எனப்படுகிறது. ஏதேப்யோ பூதேப்ய: ஸமுத்தாய என்னும் ச்ருதி மரணதசையில் அறியாமையைச் சொல்கிறது. விநச்யதி — பார்ப்பதில்லையென்பதாம் ஸவா ஏஷ திவ்யேன சக்ஷுஷா என்னும் ச்ருதிமோக்ஷ தசையில் ஸர்வஜ்ஞத்வத்தைச் சொல்கிறது. ஆகையால், அணுவான முக்தனுக்கு தர்மபூத ஜ்ஞான வ்யாப்தியாலே ஆனந்த்யம் கூறியதுயுக்தமே.

## இங்கு புனருக்தி தோஷ பரிஹாரம் செய்யும் முறை :

ஸங்கல்பாதேவ என்னும் அதிகரணத்தில் முக்தன் தன் சங்கல்பத்தால் அனைத்தையுமடைகிறனென்று கூறப்பட்டது. இந்த அபாவாதிகரணத்திலும் ஸங்கல்பத்தாலேயே தேஹத்தைக் கொள்கிறன் எனப்படுகிறது. இது கூறியது கூறவில்லையாவெனக் கேட்கலாம். இவ்வதிகரணத்தில் — ஒரு சமயம் முக்தன் தன் ஸங்கல்பத்தாலேயே தேஹத்தைப்பெறலாம். மற்றொரு ஸமயம் பரமபுருஷன் ஸங்கல்பத்தால் படைத்த தேஹத்தைப்பெறலாம் என்று அர்த்த பேதமிருப்பதால் கூறியது கூறவில்லையென்பது ஸூத்ரகாரர் திருவுள்ளமாம்.

இனி ஸத்யஸங்கல்பனன ஜீவன் (முக்தன்) ஜகத்ஸ்ருஷ்டி முதலியவற்றையுடைய சர்வேச்வரனுகவும், கூடுமா? அன்றி ஜகத்ஸ்ருஷ்டி முதலியவையும் ஸர்வேச்வரத்வமுமற்ற பரம புருஷானுபவமாத்ரத்திலான பரமஸாம்யம் மட்டும் பெறுவானு? என்ற சம்சயமே ஸங்கதி ஸகலேதர விலக்ஷணனுயும் — அநவதிகாதிசய மஹாவிபூதிகனுயும் உள்ள பரமபுருஷானுபவமேயுள்ளதா அல்லது ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஜகந்நியமனரூப லீலையுமுண்டா என்று சம்சயம். நிரஞ்ஜன: பரமம்ஸாம்ய முபைதி என்று பரம ஸாம்யம் கூறியுள்ளமையால் ஜகந்நியமனுதி — ரூபலீலையும் உண்டென்று பூர்வபக்ஷம். இதனை நிரஸிக்கிறர்.

## ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணம்

### (ஸூ) ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணுத ஸந்நிஹிதத்வாச்ச

முக்தனுக்கு ஜகத்தின் ஸ்ருஷ்டி, நியமனம் முதலிய லீலைகளைத்தவிர பரிபூர்ணப்ரஹ்மானுபவ மாத்ரத்தில் பரமசாம்யமுள்ளது. ப்ரகரணுத் = யதோவா இமானி பூதானி ஜாயந்தே ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஆத்மாவா இதமக்ர ஆஸீத் - இத்யாதிச்ருதிகளில் பரப்ரஹ்மத்தை மட்டும் உத்தேசித்து. ஜகத்வ்யாபாரம் ச்ருதம். ஆகையால் என்றபடி. **அஸந்நிஹிதத்வாச்ச** = அந்தந்த ப்ரகரணத்தில் முக்தனுக்கு இடமில்லாமையாலும். ஜகத்வ்யாபாரம் நீங்கலாகவே ப்ரஹ்மானுபவமாத்ரத்தில் பரமஸாம்யமென்று ஸித்தம்.

## (ஸூ) ப்ரத்யக்ஷோபதேசாதிதிசேந்நாதிகாரிகமண்டலஸ்தோக்தே:

*ப்ரத்யக்ஷம் = ச்ருதி:*, உபதேசாத் " தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதியென்றும், " இமான்லோகான் காமான்னீ காமரூபீ அனு-ஸஞ்சரன் " இது முதலியச்ருதிகளால் முக்தனுக்கும் ஜகத்வ்யாபாரம் உப-திஷ்டமாகையால் ந = ஜகத்வ்யாபாரமில்லை யென்பதில்லை என்றால் அது தவறு. ஏனெனில். *ஆதிகாரிகமண்டலஸ்தோக்தே:=* பரமபுருஷனால் லோகத்தை நியமனம் செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ள ஹிரண்யகர்ப்பாதிகளில் - *மண்டல - ஸ்தோக்தே:* = லோகங்களில் உள்ளபோகங்களில் முக்தனுக்கு இச்சையிருக்கு. மாகில், அங்கங்கே இச்சானுகுணமாகபரம புருஷானுக்ருஹீதனாய்க் கொண்டு அங்கு உள்ள போகங்களை முக்தன் அனுபவிக்கிறான் - என்று அந்தச்ருதியால் கூறப்பட்டதால் என்றபடி. காமான்னீயென்றும் காமசாரோபவதி என்றும் காமபோகாதிகள் மாத்ரம் ச்ருதி ஸித்தங்களேதவிர நியுங்க்தே என்று ச்ருதி இல்லாமையால் முக்தனுக்குக் கிடையாதென்பதாம்.

உத்பத்யாதியான விகாரங்களுக்குரியதாதலின், தோஷங்கள் கலந்ததும் அத்யல்பமுமான சதுர்முக லோகத்தின் போகங்கள் முக்தனுக்கு எப்படிக் கூடும் என்று சங்கைக்கு உத்திரமருளுகிறார்.

## (ஸூ) விகாராவர்த்திச ததாஹிஸ்திதிமாஹ

'ச' சப்தம் உறுதிப்பொருளைக் காட்டுவது *விகாராவர்த்தி ச* = உத்பத்யாதி விகாரங்களில்லாத பரப்ரஹ்மம்தான் - முக்தர்களுக்கு போக்யமாம். ஏனெனில், *ததாஹி ஸ்திதிமாஹ* = நிர்விகாரமாயும், அனவதி-காதிசய ஆனந்த ரூபமாயுமுள்ள பரப்ரஹ்மத்தில் முக்தனுக்கு அனுபவிப்ப வனாக இருப்பைக் கூறுகிறதும் ச்ருதியென்ற காரணத்தால் என்பதாம். யதாஹ்யேவைஷ ஏதஸ்மின் அத்ருச்யே என்ற வாக்யப்படி ரஸோவைஸ: ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆனந்தீபவதி என்றும் ச்ருதிகளில் இவ்வாறே கூறப்படுகிறது என்பதாம்.

முக்தனுக்கு இதனால் ப்ரஹ்மலோகாதிகளில் மிக அல்பமான ஸுக போகத்தால் வரவிருந்த தோஷத்திற்குப் பரிஹாரம் எப்படி எனில், கூறுவோம் தஸ்மின் லோகா: ச்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கச்சன. என்று ச்ருதி சொல்கிறபடியே உபயவிபூதிகட்கும் ஆதாரனான ப்ரஹ்மமே முக்தப்ராப்ய மாகையால் பூர்வம் கர்மவசத்தால் ஹேயமாய்த்தோன்றிய லீலாவிபூதியிலுள்ள பதார்த்தங்கள் அடியோடு கர்மாக்கள் அழியப்பெற்ற முக்தனுக்கு ப்ரஹ்மத்தின் விபூதியாக மிக்க அனுகூலமாகத் தோன்றுவதால், ப்ரஹ்மத்தின் விபூதியில டங்கிய சதுர்முக லோகாதிகளிலுள்ள பதார்த்தங்களின் போகத்தையும்

ப்ரஹ்மானுபவத்தைச் சார்ந்ததாகவே முக்தன் அனுபவிக்கிறனென்று இவ்வார்த்தத்தைக் கூறுகிறது ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி என்ற ச்ருதி. ஆகையால், தோஷமில்லையென்று கருத்து.

## (ஸூ) தர்சயதச்சைவம் ப்ரத்யக்ஷானுமானே

ப்ரத்யக்ஷம் = ச்ருதி : அனுமானம் = ஸ்ம்ருதி : இவை இவ்வாறு தர்சயத: ஜகத்வ்யாபாராதிகள் பகவானுக்கேயுரியவை: முக்தனுக்கு அவை கிடையா என்றும் - பரிபூர்ணப்ரஹ்மானுபவமேயவனுக்கு உள்ளதென்றும், இத்தகைய அர்த்தங்களைக் காட்டுகின்றன. ச்ருதியாவது தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாசஸ்ஸம்பூத :- பீஷாஸ்மாத் வாத: பவதே, ஏதஸ்யவாஅக்ஷரஸ்ய ப்ரசாஸனே கார்க்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌதிஷ்டத: என்பது முதலியவை. ஸ்ம்ருதியாவது :- "அஹம் ஸர்வஸ்யப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே। விஷ்டப்யாஹமஹம் க்ருத்ஸ்னம் ஏகாம்சேந ஸ்திதோஜகத்। ஸோऽபித்யாய சரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர்விவிதா ப்ரஜா:। ப்ரசாஸிதாரம் ஸர்வேஷாம்" முதலியவை, ஜகத்ஸ்ருஷ்டி முதலியவற்றைப் பரமபுருஷனே செய்வதாகக் கூறுகின்றன. அத அகாமயமான: அகாமோநிஷ்காம: ஆப்தகாம: என்ற ச்ருதியும், ப்ரியோஹி ஜ்ஞானினோऽத்யர்த்தமஹம் ஸசமமப்ரிய:। உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞானி த்வாத்மைவ மே மதம்.

ஆஸ்தித: ஸஹி யுக்தாத்மா மாமேவானுத்தமாம் கதிம்।
வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸமஹாத்மா ஸுதுர்லப:॥

என்றிது முதலிய ஸ்ம்ருதிகளும் முக்தனுக்குப் பரமபுருஷாநுபவமே போகமென்று சொல்கின்றன.

## (ஸூ) போகமாத்ர ஸாம்யலிங்காச்ச

ஸோऽச்னுதே ஸர்வான் காமான் ஸஹப்ரஹ்மணாவிபச்சிதா என்ற ச்ருதியில் ப்ரஹ்மானுபவமென்னும் போகமாத்ரத்தில் ஸாம்யம் சொல்கையாகிற லிங்கத்தாலும் முக்தனுக்கு ஜகத்வ்யாபாரமில்லை என்பது கருத்து.

ஜகத்காரணத்வம், ஜகந்நியந்த்ருத்வம் முதலியவை பரம புருஷனுக்கே அஸாதாரணமானவையென்றால், இவ்வாறு ஸ்வதந்த்ர குண ஸர்வேச்வரன் முக்தனை ஒருகால் திரும்பவும் ஸம்ஸாரியாக்கக் கூடுமேயென்ற சங்கைக்கு உத்தரமருளிச்செய்கிறார்.

## (ஸூ) அநாவ்ருத்திச்சப்தாத் அநாவ்ருத்திச்சப்தாத்

இங்கு ஆவ்ருத்தியாவது பரிபூர்ண ப்ரஹ்மானுபவத்தை விட்டு ஸம்ஸாரியாதல். அநாவ்ருத்தி - ஒருகாலும் அவ்வாறு திரும்பவும் ஸம்ஸாரத்-

திற்குத் திரும்பாமை. பரிபூர்ணப்ரஹ்மானுபவத்திற்கு இடையீடில்லாதிருக்கை. இது முக்தனுக்கு சப்தத்தால் தெரிகிறது. பகவானுக்கு ஸ்ரஷ்ட்ருத்வம், நியந்த்ருத்வம் முதலியன ச்ருதியால் தெரிவது போலவே, ஏதேந ப்ரதிபத்யமாநா: இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே என்றும். ஸகல்வேவம் வர்த்தயன் யாவதாயுஷம் ப்ரஹ்மலோக மபிஸம்பத்யதே நசபுநராவர்த்ததே என்றும்.

மாமுபேத்ய புநர்ஜன்ம து:காலய மசாச்வதம் ।
நாப்னுவந்தி மஹாத்மான; ஸம்ஸித்திம் பரமாம்கதா: ॥

ஆப்ரஹ்ம புவனான் லோகா: புநராவர்த்திநோऽர்ஜுன ।
மாபுபேத்யது கௌந்தேய புனர்ஜன்ம நவித்யதே ॥

இதம் ஜ்ஞான முபாச்ரித்ய மம ஸாதர்ம்ய மாகதா: ।
ஸர்க்கேபி நோபஜாயந்தே ப்ரளயே நவ்யதந்திச ॥

இத்யாதி ச்ருதி ஸ்ம்ருதி ரூபங்களான சப்தங்களால்தானே முக்தனுக்கு ஆவ்ருத்தியில்லையென்று தெரிகிறது. இங்கு பாஷ்யத்தின் அபிமதமான நால்வகை சங்கைகளுக்கும் பரிஹாரம் வருமாறு பரம புருஷன் ஒப்பாரும் மிக்காரு மில்லாதவன். ஆதலின், அவனைவிட உயர்ந்த புருஷனால் ஆவ்ருத்தி சங்கிப்பதற்கில்லை. அவைதிகாதிசயாநந்த ரூபமான ப்ரஹ்மத்தையனுபவிப்பவனுக்கு அன்யாபேக்ஷையில்லாததாலே ஸ்வேச்சையாலும் புநராவ்ருத்தி சங்கிக்க வியலாது. இவனுக்கு வாசனையோடு கர்ம சமுதாயம் நசித்தபடியால் கர்மமூலமாகவும் புநராவ்ருத்தி சங்கிக்கவொண்ணாது. பரமபுருஷன் ஸ்வதந்த்ரனானாலும் ஸத்ய ஸங்கல்பனை தான் முக்தனைத்திருப்பியனுப்பமாட்டேனென்று ஸங்கல்பித்தபடியே செய்ய சக்தனானபடியால், அவன் சங்கல்பத்தாலும் புநராவ்ருத்தி சங்கிக்கவொண்ணாது. ஆகையால், காலதத்வமுள்ளவரையும் முக்தைச்வர்யம் நிலைபெற்றதாகிறது. இருமுறை நசபுநராவர்த்ததே என்று கூறியது. சாஸ்த்ர பரிசமாப்தியைக் காட்டுகிறதென்று எல்லாம் மிகவும் ஸமஞ்ஜஸம்.

இந்தக்கடைசி ஸூத்ரத்தைத் தனியதிகரணமாகப் பிறர் சிலர் கருதுகிறார்கள், அது ஸ்ரீபாஷ்யகாரருக்கு உடன்பாடன்று. இது முன் அதிகரணத்தின் சேஷமென்று ஸ்வாமிதேசிகனின் திருவுள்ளம்.

பரமபுருஷனும் - முக்தனும் ஸத்யஸங்கல்பர்களாகையால், ஜகத்வ்யாபாரத்தாலும் ஸாம்யசங்கை ஏற்பட்டது. அதை நிவ்ருத்தி செய்ய இவ்வதிகரணம் தேவைப்பட்டது. அதனால் முக்தனுக்கு இவ்வுலகில் வருகையே இந்த ஸூத்ரத்தால் தடுக்கப்படுகிறது. இதனால் முக்தன் வைகுண்டத்தில்

பகவத்ஸேவா பரதந்த்ரனாய் இருக்கிறதைத்தவிர தன்னையும் ஜகத் ஸ்ரஷ்டா வென்று சங்கிக்கும்படி ஆவ்ருத்தியை அடைவதில்லை யென்பதால் இந்த ஸூத்ரம் பூர்வாதிகரணசேஷமாயிற்று. இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே என்கிறவிடத்தில் இமம் என்ற இதம்சப்தம் எல்லா ஆவர்த்தங்களுக்கும் உபலக்ஷணமாகையால் எந்த ஒரு மாநவாவர்த்தகத்திலும் ஆவ்ருத்தி கூடாது. ஆனாலும், இந்தமாநவ ஆவர்த்தத்தில் ஆவ்ருத்தி கூடலாமென்றுசங்கையும் தவறு, ஆகையால், ஸர்வகர்மவிநிர்முக்தனை இவனுக்கு கர்மாதீனமாகப் புனராவ்ருத்தி கிடையாது. ஆகவே, ஸர்வஸ்வாமியான பரமபுருஷனுக்கு அஸாதாரண சின்னமான - ஜகத்காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், ஸ்ரிய: பதித்வம், சேஷசாயித்வம் முதலியவற்றுடன் ஸர்வதேச காலாவஸ்தைகளுக்கும் பொருத்தமான ஸர்வவித கைங்கர்யமே முக்தனுக்கு உரியது என்று அதிகரணத்தின் அர்த்தம் நிலை பெற்றது.

இந்தப்பாதத்திலுள்ள ஆறு அதிகரணங்களின் ஸாரம் :—

1. ஸம்பத்யாவிர்ப்பாவாதிகரணத்தில் - அபஹதபாப்மத்வாதித்ருஷ்டி விசிஷ்டமாக ஸ்வரூபத்திற்கு ஆவிர்பாவம் பற்றியும்,

2. அவிபாகாதிகரணத்தில் - ஸ்வப்ரகாரியாய் பரமபுருஷ பர்யந்தமாக அஹம் ப்ரஹ்மாஸ்மி என்கிற அனுபவம் உண்டென்றும்,

3. ப்ராஹ்மாதிகரணத்தில் ஜ்ஞான ஸ்வரூபமாக ச்ருதியில் கூறப்பட்ட முக்தனுக்கு அபதஹபாப்மத்வாதி குணங்களாகிற ப்ரகாரங்களுடன் ஸ்வானுபவமும்,

4. ஸங்கல்பாதிகரணத்தில் தன் ஸங்கல்பத்தாலே ஜ்ஞாத்யாதிகளை யடைதலும்,

5. அபாவாதிகரணத்தில் முக்தனுக்கும் தேஹபரிக்ரஹத்தில் நியமம் இன்மையும்

6. ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணத்தில் ப்ரஹ்ம ஸாம்ய ப்ராப்தியில் ஜகத் காரணத்வாதிகளான ப்ரஹ்மலக்ஷண வர்ஜனமும் என்பவை ஆறு அதிகரணங்களாலும் விளக்கப்பட்டன.

ஸ்ரீ பாஷ்யார்த்ததீபிகை நான்காம் அத்தியாயமும் முற்றிற்று.

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பண மஸ்து.

மங்களம் பாஷ்யகாராய மஹனீயகுணாப்தயே !
மங்களம் பூர்வபாச்சாத்ய குருப்யோஸ்து நிரந்தரம் !!